தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு நெ. 116.

புல்லையந்தாதி

(பொழிப்புரையுடன்)

பதிப்பாசிரியர் :

கி. கோதண்டபாணி, M. A., B. O. L.,

துணைத் தமிழ்ப் பேராசிரியர்,

ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி.

தஞ்சை ஸரஸ்வதி மஹால் நிர்வாகக் கமிட்டியினருக்காக

கௌரவக் காரியதரிசி,

ஒ. அ. நாராயணஸ்வாமி, B. A., B. L.,

அவர்களால்

வெளியிடப்பட்டது.

★

சகம் 1889]   விலை ரூ. 1—25.   [கி. பி. 1967

தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு - 116.

புல்லையந்தாதி

(பொழிப்புரையுடன்)

★

பதிப்பாசிரியர்:

கி. கோதண்டபாணி, M.A., B.O.L.,

துணைத் தமிழ்ப் பேராசிரியர்,

ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி.



தஞ்சை ஸரஸ்வதி மஹால் நிர்வாகக் கமிட்டியினருக்காக

கௌரவக் காரியதரிசி,

ஒ. அ. நாராயணஸ்வாமி, B.A., B.L.,

அவர்களால்

வெளியிடப்பட்டது.

★

சகம் 1889] விலை ரூ. 1—25 [கி. பி. 1967

INTRODUCTION

When a few stanzas of this thrilling devotional lyric were read out to me from the manuscript by our Librarian, I did not take long to conclude that this was a "gem of purest ray serene" and I decided to lift it out of "the dark unfathomed caves" of our literary ocean. Here then it is placed before the public with the fervent hope that the vast number of its readers will ratify my first impressions of the poem.

Pullaiyandadi is not, like many other extollatory poems belonging to the category of *Stotra* literature, a mere string of conventional epithets or a stale list of habitual vocatives. The tone of profound sincerity and earnest devotion is ringing forth in every stanza and the whole poem therefore produces an impression of a spontaneous overflow of the emotion of a devout poet and not that of a self-conscious workmanship of a consummate versifier.

The poem, consisting of a hundred stanzas, verbally interlinked by adopting the literary technique of *andadi* which is the proud and exclusive possession of Tamil literature, is addressed to Lord Vishnu enshrined in the temple of *Thiruppullani*, one of the 108 sacred shrines of the Vaishnavas.

Tradition has it that Sri Rama, in the course of his expedition to Lanka for the recovery of Sita, performed here the invocatory ceremony of lying for three days on the bed spread out with the (*darbha*) holy grass to court the aid of the Sea-god to cross over the ocean to Lanka, along with his host of monkey chieftains. This accounts for the holy place being called *Darbhasayana* in Sanskrit and *Pullani* in Tamil.

Nothing is known about the name or identity or the date of the author from the manuscript, nor has any external evidence been traced about him. Yet, between the lines of the poem, we can have a few glimpses at the distinctive traits of the author. He eloquently emphasises on the deceptive and fleeting nature of the pleasures of the senses. (Vide stanzas 3, 6, 79, 94). He condemns categorically the futile and arduous quest of worldly treasures and the servile eulogy of disdaining lords (stanzas 9, 10, 35, 44). He contrasts these, with effective and convincing force, with the perennial Bliss of divine grace which is by far easier to attain than the will o' of the wisp of earthly comforts (Stanzas 17, 21, 37, 40, 59). These examples reveval the personality of the author to us as one imbued with a sublime spirit of renuncation, most probably developed after some keen disappointments in the conflicts of life. Through his numerous but slight ,and passing allusions to religious traditions, theo-

logical concepts and puranic legends, the author's scholarship in the lore of the scriptures stands out prominently. The author reveals himself through his poem as a votary of *Bhakti* cult, aiming at the attainment of God-realization through the medium of emotion like the *Alwars* and *Nayanmars* and not an adherent of the dialectical school which aims at the same goal through the medium of intellect like the *Acharyas* and *Bhashyakaras*. He contents himself with graceful, plaintive appeals to divine mercy and does not embarrass his Muse by making her a hand-maid to metaphysics as many scholastic hymn-makers do.

From the proverbial sweetness of the Tamil language, the author of *Pullaiyandadi* has drawn out the essence of melody. He has attempted many types of particularly musical metres, following the model of Arunagirinathar's *Thiruppugazh*, and many of his stanzas are models of "linked sweetness, long drawn out."

Of this exquisite poem, we have but one Mss. in our library bearing No. M. 233 (g)/D.249. Defaced by time in some places, eaten up by moths and worms elsewhere and often faulty with scribal errors, this single Mss. has almost posed a challenge to the editor. Moreover in the Mss., some stanzas are totally missing (25 to 27, 34) and others partly missing (30, 91, 99). Some words are mutilated in

the original, but they are all left to be emended authoritatively after scrutiny of some other Mss. which future many bring to light.

It was such a hard task which Sri K. Kodandapani M. A., B. O. L.,Professor of Tamil, Sri Pushpam College, Poondi, has undertaken to perform for our library and fulfilled very creditably and to him our thanks are due in an abundant measure.

We wish to record here our sense of gratitude to the Government of Madras for their financial help to the Library, but for which, priceless treasures like this will have to lie hidden for ever.

Sarasvati Mahal Library,
Thanjavur,
14—3—'67.

O. A. NARAYANASWAMI,
Honorary Secretary.

முன்னுரை.

உயர்வற உயர்நலம் உடையவனுகிய திருமமர் மார்பன் திருக்கோயில் கொண்டருளும் பல தலங்களிலும் சிறந்தன வாக ஆழ்வார்களால் போற்றப்பட்டு அவர்களால் மங்களா சாசனம் செய்யப்பெற்ற தலங்கள் நூற்றெட்டு ஆகும். இந் நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் சிறந்ததாகவும், புகழுற்ற தாயும் விளங்கும் தலம் பாண்டிநாட்டுத் தெற்குக் கடற்கரை யில் அமைந்திருப்பதும். தர்ப்பசயனம், ஆதிசேது, திருப் புல்லாணி என்ற பல பெயர்கள் கொண்டு விளங்குவதுமான திருப்புல்லாணித் தலமாகும் இத்தலத்தினை திருமங்கை யாழ்வார் மிக அழகாகத் தான் பாடிய பெரிய திருமொழி ஒன்பதாம் பத்து, நான்காம் திருமொழியின் இரண்டாம் பாசுரத்தில் கனிந்துருகிப் பாடியுள்ளார்.

> "முன்னங் குறளுருவாய் மூவடிமண் கொண்டளந்த
> மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன்பயர்ந்தேன்
> பொன்னங் கழிக்கானற் புள்ளினங்காள்! புல்லாணி
> அன்னமாய் நூல்பயந்தார்க காங்கிதனைச்
> செப்புமினே"

"என்னுளத்தை ஆட்கொண்ட எம்பெருமான் புல்லாணித் தலத்தே பொலிவோடு வீற்றிருக்கின்றார். அவர் திருவிக்கிரம னாய்த் தோன்றி மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகை முடித்த சிறப்பினைக் கேள்வியுற்று அவன் பாற்பட்ட காதலால் என்னுடல் பசலை பூத்தது. ஆகையால் நீர்க்கால்களையுடைய கடற்கரையில் உலவும் பறவையினங்களே! விரைந்து சென்று அவர்க்கு என்னிலையை உணர்த்துவீர்களாக" எனத் தன் அன்பினையும், புல்லாணியின் வளத்தினையும், புல்லாணி

இறைவன் ஹம்ஸமாய் அவதரித்து பிரமனுக்கு வேதங்களை உணர்த்திய பரோபகாரத்தின் சிறப்பினையும் கூறித் தூது அனுப்புகின்றார்.

தலச் சிறப்பு

இத்தலத்தினை வடமொழியில் "புல்லாரணியம்" (மலர்ந்த பூக்கள் நிரம்பிய காடு) என வழங்குவர். இராமபிரான் தர்ப்பைப் புல்லை அணையாகக்கொண்டு படுத்து உறங்கிய தல மாகையால் "புல்லணை" எனத் தமிழில் பெயர் பெற்றது இராமபிரானால் முதன் முதல் கடலில் கட்டப்பெற்ற அணை யாகையால் "ஆதிசேது" என்ற பெயரும் பெற்றிலங்குகிறது. வைணவர்கள் இத் தலத்தினை தம் மரபுப்படி "திரு அணை" எனவே வழங்குவர் "சேதுக்கரை" எனவும் வழக்காற்றில் இன்று விளங்குகிறது. இத்தலத்தினை 'சரணாகதித்தலம்' எனக் கூறுவர். புல்லவர், கண்வர், காலவர் என்ற மூன்று முனிவர்கட்குத் திருமகள்நாதன் அருள்பாலித்த இடம் இது வாகும்.

இத் தலத்தில் வீபீஷணனது சரணாகதியும், சுகன், சாரணன் முதலியோரது சரணாகதியும் சமுத்திரராசனும். அவனது மனைவி வாருணி முதலியோரது சரணாகதியும் நிகழ்ந்து சரணாகதியின் மூன்று பிரிவாக உள்ள சொரூபத் தியாகத்திற்கும், உபாயத் தியாகத்திற்கும், பலத் தியாகத் திற்கும் முற்சொன்ன மூன்று பிரிவினரும் முறையாக இலக் கணமாகத் திகழ்ந்து விளங்கினர் என அறிகின்றோம். இத் தலத்தில் இராமர் சீதையைத் தேடிவந்தபோதில் மூன்று நாட்கள் தங்கினர் எனவும் கூறுவர். மேலும் இராவணனிட மிருந்து போந்த தூதர் தன்னை எளிய மானுடம் என எண்ணக் கூடாதென்பதை விளக்கவே பாலாழியில் படுத்த வண்ணமா யிருந்தார் என்றும் கூறுவர். இச் செய்திகளை உறுதிப் படுத்துவதுபோல பழம்பெரும் இலக்கியமாகிய அகநானூறு

" வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுறை
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல் வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றிவ் வழுங்க லூரே "

(அகம் களிற். பாடல்: 70)

எனத் தெளிவாகக் கூறுகின்றது இவ்வடிகட்கு உரை எழுதிய ஆசிரியர் " வேலினையுடைய பாண்டியரது மிக்க பழைமையுடைய திருவணைக் கரையின் அருகில், முழங்கும் இயல்பினதான பெரிய கடலின் ஒலிக்கின்ற துறைமுற்றத்தில் வெல்லும் போரினில் வல்ல இராமன் அரிய மறையினை ஆய்தற் பொருட்டாகப் புட்களின் ஒலி இல்லையாகச்செய்த பல விழுதுகளையுடைய ஆலமரம்போல இவ்வூரில் எழும் ஒலி அவிந்து அடங்கியது " என உவமைப் பொருளாக எடுத்தாண்டுள்ளார். இப் பழம்பெரும் இலக்கியமாகிய அகநானூற்றில் குறிப்பிடப்படும் செய்தியே இப் புல்லாணிச் செய்தியென ஐயமற அறிதற்கிட மேற்படுகின்றது. 'ஆல்' என அகநானூற்றில் குறிக்கப்பட்டுள்ள பெயர் இவ்வூர் தலவிருட்சமாக இன்று அரசாகக் குறிக்கப்பட்டுள்ளது போலும். ஆலினையும், அரசினையும் இணைத்தும், ஒன்ருயும் பேசுதல் பண்டு தொட்டுப் பயின்றுவரும் வழக்காக உள்ளதை யாவரும் உணரலாம்.

இத்தலம் இராமனுதபுரத்திற்குத் தென்கீழ்த்திசையில் ஆறுகல் தொலைவில் கடலுக்கு முன்னுக ஒரு கல் தொலைவில் அமைந்துள்ளது.

கோயிற் சிறப்பு

இத் திருத்தலத்தில் அமர்ந்தருளும் இறைவன் பெயர் தெய்வச்சிலையான் என்பது. ஆதி செகன்னுதர், கல்யாண செகன்னுதர் என்ற பெயர்களும் உண்டு. அம்மையின் பெயர் பதுமாசனித் தாயார். விமானம் சொஸ்திக விமானமாகும்.

இங்குள்ள தீர்த்தங்கள் சக்கரதீர்த்தம் முதலிய ஆறு ஆகும். இங்கு சிறப்பாக விளங்கும் தலவிருட்சம் அரச மரமாகும். இது பன்னூறு ஆண்டுகளாகப் பல விழுதுகளோடு விளங்கு வதாயும், தெய்வத்தன்மை பொருந்தியதாயும். மகப்பேறு வேண்டுவோர் இவண்போந்து இம்மரத்தை வலமாக வந்து வேண்டிக்கொண்டால் இம்மரவடிவில் விளங்கும் நாரணன் அருள் பாலிப்பார் எனவும் கூறப்படுகின்றது. இங்கு இறை வன் செகன்னாத வடிவில் வீற்றிருந்த திருக்கோலத்துடனும், தர்ப்பசயன இராமன் பள்ளிகொண்ட திருக்கோலத்துடனும். பட்டாபிராமன் நின்ற திருக்கோலத்துடனும் விளங்கி நின்றும், இருந்தும், கிடந்தும் மூன்று கோலங்களிலும் விளங் குகின்றார். திருமாலே சத்திய லோகத்திலிருந்து இங்கு பொன்மயமான அரசவடிவில் தோன்றியுள்ளார் எனவும் கூறு வர். தர்ப்பசயனத்தில் துயிலும் கோலத்துடன் விளங்கும் இராமன் பட்டாக்கத்தியுடன் வீரசயனத்தில் விளங்குகின்றார். இத்தலத்தில், திருமாலின் உந்தியில் (நாபியில்) உள்ள தாமரை மலரிலிருந்து இரு தண்டுகள் பிரிந்து சுவரில் பொருந்தியிருப் பது சிற்ப நுட்பத்தின் சிகரமாய் விதிங்குகிறது.

புலமைச் சிறப்பு

இத் திருப்புல்லாணியில் சக்கரைமுத்துப் புலவர் என்பார் இங்கிருந்து தம் நூலை அரங்கேற்றினார் எனக் கூறுகின்றனர். இவ்வூரில் பல வைணவ சமயப் பெரும் புலவர்களும், சமயத் தலைவர்களும் வந்து தங்கியும், வழிபாடாற்றியும் சென்றுள்ள னர் எனத் தெரிகிறது இவ்வூருக்கு அண்மையில் உள்ள ஊராகிய 'சிக்கில் கடாரம்' என்ற ஊரில் மணவாள மாமுனி கள் தோன்றினார் என அறிகின்றோம். வைணப் பெரியாராகிய பெரியநம்பிகளும், நஞ்சீயரும் இங்கு சிலகாலம் தங்கி சமயத் தொண்டில் ஈடுபட்டிருந்தனர் எனவும் அறியக் கிடக்கிறது. இராமனாதபுரம் பகுதி புலவர் பலர் தோற்றமெடுத்த சிறப்பினை

யுடையது உமறுப்புலவர், சீதக்காதி, தாயுமானவர் போன்றவர் இவ்விராமநாதபுரம் பகுதியில் உறைந்து சமயத்தொண்டும் தமிழ்த்தொண்டும் ஆற்றியுள்ளனர். 'பாரில் பரித்த உரையெல்லாம் பரிமேலழகர், தெரித்த உரையாமோதெளி' என்ற சிறப்பிற்குரியதோர் உரையை திருக்குறளுக்கு வகுத்துத்தந்த பரிமேலழகர் தோன்றிய ஊரும் இவ்விராமநாதப்புரப் பகுதியாகும் இத் திருப்புல்லாணித் தலத்திற்கும், சேதுக்கரைக்கும் இடையில் உள்ள ஊர் சின்னக்கோவிலாகும். இங்கு ஸ்ரீநிவாசன் ஆலயம் உள்ளது. சிறந்த சுதை வேலைப்பாடமைந்த சேதுமாதவன் உருவச் சிலையும், முழங்கால் வரை கடல்நுரை படிந்த தோற்றத்துடன் விளங்கும் அகத்தியர் சிலையும் இவண் அழகுற விளங்குகின்றன.

நூற் சிறப்பு

இத்தகு பெருமைவாய்ந்த எழிற்றலமாம் திருப்புல்லாணியில் கோயில் கொண்டருளும் திருமால்மீது அந்தாதித் தொடையால் புனையப்பட்ட நூறு பாடல்களே 'புல்லையந்தாதி' யாகும். தமிழில் வழங்கும் தொண்ணூற்ருறு வகைச் சிறு பிரபந்த வகைகளுள் அந்தாதியும் ஒன்ருகும். இவ்வாறு சிறு பிரபந்த வகைகளை (சிற்றிலக்கியங்கள்) தொல்காப்பியச் செய்யுளியலுடையார் 'விருந்து' என்ற பெயரால் குறிக்கின்ருர். இந்நூலில் ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்து, அசை, சீர், சொல், அடி இவற்றுள் ஏதேனும் ஒன்று அடுத்த பாடலின் முதலாக வருமாறு தொகுத்துப்பாடி இறுதிச் செய்யுளின் இறுதியும், முதற்பாடலின் முதலும் ஒன்ருக இணையும்படி மண்டலித்து மாலைபோலத் தொகுத்து முடிப்பது அந்தாதியாகும். இதனைச் 'சொற்ருெடர்நிலை' என்றும் கூறுவது உண்டு. கலம்பகம், இரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை முதலிய பல்வேறு நூல்களும், திருவாசகத்தில் உள்ள திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் முதலியனவும்

திருவாய்மொழியும் ஆகிய இந்நூல்களும், இவைபோன்ற பல அரிய நூல்களும் அந்தாதியாக இயற்றப்பட்டிருப்பினும் அவை களெல்லாம் வெவ்வேறு காரணங்களின் சிறப்புப்பற்றி வேறு வேறு பெயர்கள் பெற்றன. அவைகளும் சொற்றொடர் நிலை களேயாகும். எனினும் அந்தத்தை ஆதியாகவுடைய ஒரு சிறப்புப்பற்றி அந்தாதி எனப் பெயர்பெற்ற நூல்களே அந் தாதி என வழங்கப்படும் சங்ககாலத்தொகை நூல்களுள் புறநானூறு, அகநானூறு, சிறுபாணாற்றுப்படை, ஆகிய இவற் றுள் அந்தாதித்தொடை பயின்றிருப்பதாலும் பதிற்றுப் பத்துள் ஒரு பதிகமே அந்தாதியாக வந்திருத்தலானும் அந்தாதியின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டது என்பது நன்கு புலனாகும் பின்னர் நக்கீர தேவர் இயற்றிய 'கைலைபாதி காளத்திபாதி' அந்தாதியும் காரைக்காலம்மையார் பாடிய 'அற்புதத் திருவந்தாதி', சேரமான் பெருமாள் நாயனார் பாடிய 'பொன்வண்ணத்தந்தாதி' ஆழ்வாராதிகள் இயற்றிய அந்தாதிகள் முதலியன மல்கின. இக்காலத்திலேயே சமண சமயச் சார்புடைய 'திருநூற்றந் தாதியும்' தோன்றியது. முதலாழ்வார்கள் மூவரும் இயற்றிய அந்தாதிகள் அன்பர்களுக்கு முகுந்தனை ஞான விளக்கேற்றிக் காட்டி ஞாலம் உய்யச்செய்தன. காரைக்காலம்மையார் செய்த அற்புதத் திருவந்தாதி கவியுலகில் பெண்கள் பெற்ற உயர்ந்த இடத்தை விளக்கிக்காட்டுந் திறனுடையது. சேரமான் பெரு மாள் பாடிய பொன்வண்ணத்தந்தாதி பொன்வண்ணமாகவே மிளிர்கின்றது. கம்பர் பாடிய சரசுவதியந்தாதியும், சடகோப ரந்தாதியும் கலையுலகில் அன்பர் உள்ளத்தை ஈர்த்துக் களிப் புறச் செய்யும். பரஞ்சோதி முனிவர் பாடிய 'மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி' யின் மாட்சி போற்றக்கூடியது. 'குட்டித் திரு வாசகம் என்று போற்றத்தகும்' திருக்கருவைப் பதிற்றுப்பத்

தந்தாதி' 'கன்னற்பாகில், கோற்றேனிற் கனியிற் கனிந்த கவி' களால் யாக்கப்பட்டது. இத்தகைய சிறப்புவாய்ந்த அந்தாதி வரிசையுள் இந் திருப்புல்லாணியைப் பற்றிப் பாடிய ' புல்லையந்தாதி " யும் இடம்பெறத்தக்க ஒன்றாகும்.

நூலாசிரியர் சிறப்பு

இப்புல்லையந்தாதியின் ஆசிரியர் பெயர் அறிதற்கியலவில்லை இந்நூலாசிரியர் திருவாய்மொழி, திருமொழி இவைகளின் சாரத்தைப் பிழிந்து கொடுத்துள்ளார் என்று கூறல் சாலப் பொருந்தும். இவர் இத் திருப்புல்லாணியைச் சார்ந்தவராக இருந்தல் வேண்டும், அல்லது இத்தலத்தில் உறையும் பெருமாள்மீது எல்லையற்ற அன்புகொண்டவராகவோ இருத்தல் வேண்டும். இந்தலச் சிறப்பு அனைத்தையும் இவர் நன்கு அறிந்து கூறுவதனின்று இவர் இவ்வூராயிருத்தல் சாலும்.

இப் புல்லையந்தாதியின் ஓலைப் பிரதி மிகவும் சீர்கேடான நிலையில இருந்தது. இதுவரை வெளிவராத ஒரு நூல் என்பது இதற்கு ஒரு சிறப்பு ஆகும். சில பாடல்கள் கிடைக்கப் பெறவில்லை. ஓரிருபாடலில் சில வரிகள் கிட்டில. இப்பாடல்களைச் செம்மை செய்து பொழிப்புரைதந்து வெளியிடுமாறு இப்பணியை எனக்குச் சரஸ்வதிமகால் நூலகக் கௌரவச் செயலாளர் அளித்தார். உடனே இவ்வேண்டுகோளை ஏற்று இப்பணியை முடிக்க என்னை அநுமதித்த, பூண்டி புட்பம் கல்லூரி ஆட்சிக் குழுத் தலைவரும், மாண்புசால் வள்ளலும் உயர்கல்விதந்த உத்தமரும் ஆகிய உயர்திரு இராவ்பகதூர் அ. வீரையா வாண்டையார் அவர்கட்கும் இப்பணியை எனக்கு நல்கிய பெருமதிப்பிற்குரிய புலமைச்செல்வரும் சரஸ்வதி மகால் நூலகக் கௌரவச் செயலாளருமாகிய உயர்திரு O. A. நாராயணசாமி அய்யர், B A., B. L., அவர்கட்கும் என் தலையாய நன்றி உரித்தாகுக.

இந்நூல் வெளிவர எனக்குப் பலவகையாலும் உதவி செய்தும், செய்யுட்களை ஒப்புநோக்கியும், ஆய்வுரை வழங்கியும் ஊக்கமூட்டிய சரஸ்வதிமகால் நூலகர், ஓய்வுபெற்ற வடமொழிப் பேராசிரியர் திரு V. கோபால ஐயங்கார், M. A., அவர்கட்கு என் ஆழ்ந்த நன்றி உரியதாகுக. மேலும் இத் திருப்புல்லாணித் தலச் சிறப்புச் செய்திகள் சிலவற்றை அத்தலத்தார்மூலம் கேட்டறிந்து எனக்குக் கூறி உதவிய வடமொழிப் புலவர் திரு N. S. தாத்தாச்சாரியார் அவர்கட்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இறுதியில் இப்பணியில் என்னை ஊக்குவித்த திருமகள் மணாளனும் திருவரங்கச் செல்வனாரின் திருவடி போற்றுகின்றேன்.

அன்பன்,

1—3—'67,
தஞ்சாவூர்.

கி. கோதண்டபாணி,
ஸ்ரீ பூண்டி புட்பம் கல்லூரி, பூண்டி.

புல்லையந்தாதி

[காப்புச் செய்யுள்]

சீர்பூத்த மணிமார்வுங் கமலக்கையுஞ்
சிலைவாடண் டாழிசங்கும் சிறக்கமேவும்
வார்பூத்த முலைத்திருமான் களிக்குங்கோமான்
மருவுபுல்லை யந்தாதி வழுத்தநாளும்
தார்பூத்த மார்பினராய் உயிர்க்கங்கங்காய்ச்
சராசரமாய் வெறுவெளியாய்த் தனியா
[யெங்குங்
கார்பூத்த மேனியனாய் நிறைந்துநிற்கும்
கைம்மலைச்செம் மலையிருத்திக் கருத்திற்
[சேர்ப்பாம்.

(பொழிப்புரை) சீர்சான்ற அழகிய மார்பும், தாமரை போன்ற கையும், வில், வாள், தண்டு, ஆழி, சங்கு எனும் ஐந்து ஆயுதங்களும் பொருந்தி விளங்கு பவனும், கச்சணிந்த தனங்களையுடைய திருமகள் உளங் களிக்கும் கோமானுமாகிய திருப்புல்லாணிப் பெருமானை அந்தாதித் தொடையால் அடியேன் பாட, மாலையணிந்த மார்பினனாய், உயிர்தோறும் நீக்கமற நிறைந்து இயங் கியற் பொருளாயும், நிலையியற் பொருளாயும், விண் வெளியாயும், தனியாயும், பார்க்குமிடந்தோறும் வியா பித்தும் நிற்கும் கருநிறமேனியனை, கஜேந்திரனுக்குக்

கருணை யளித்த பெருமாளை உளத்தே தியானிக்கின்றேன்.

[வேறு]

புகழ்பெறு திருமால்மேவு புல்லையந்தாதி கூறச்
சுகர்சௌனகர் அக்ரூரர் துருவர் நாரதர் காண்டீப
ரக மகிழம்பரீட ரனுமார் வெங்கலுழன் மற்று
மகிமை சேர் பரமபாக வதர்பதம் வணங்குவோமே.

(பொ-ரை) புகழ்மிக்க திருமகள் கேள்வனாகிய திருமால் உறையும் புல்லையந்தாதி யான்கூறத் துவங்கும்போது, திருமாலின் சிறந்த அடியாராகிய சுகர், சௌனகர், அக்ரூரர், துருவர், நாரதர், காண்டீபர், உளமகிழ் அம்பரீடர், அனுமார், கருடன் (சிறிய திருவடி, பெரியதிருவடி) முதலிய பரம பாகவதர்களின் பாதங்களை என் சென்னிமேற் சேர்க்கின்றேன்.

[நூல்]

1. **பொன்மருவும் புல்லாணிப் பதிக்கிறைவா**
எனையாளும் புனித மாலே
மின்மருவு மணிமார்புங் குழைக்காதும்
மலர்முகமும் விளங்குந் தோளும்
பன்மணிப்பூ ணிலவெறிப்பக் கலுழன்மிசை
எதிர்தோன்றிப் பரிவு கூர்ந்தென்
றன்மனதிற் குடியாகி எக்காலு
மகலாமற் றங்கு வாயே.

(பொ-ரை) பொன் நிறைந்த திருப்புல்லாணிக்கு இறைவனே! என்னை அடிமையாக ஏற்றருளும் புனித

மாலே! ஒளி சான்ற மார்பும், குண்டலம் அணிந்த காதும், மலர் போன்ற முகமும், சிறந்த தோளும் உடைய நீ, பல இரத்தினக் கலன்கள் நிலவுபோல் ஒளி வீசக் கருடாழ்வான் மீது என் எதிரிற்றோன்றி, என் பால் அன்புகூர்ந்து என் மனதை விட்டகலாது என்றும் தங்குவாய்.

2. தங்கமலை முலையார்கள் மாயவலைக்
காளாகித் தயங்கியே யென்
னங்கமலை யாமலெந்நா ளுன்னடியார்
தன்னடியா னுவே னய்யா
சங்கமலை வாயின்முத்தம் கொழித்திடுசக்
கரதீர்த்தத் தடஞ்சூழ்ந் தென்றும்
செங்கமலை மேவுதிருப் புல்லாணி
மருவிவளர் செங்கண் மாலே.

(பொ-ரை) தங்கமலை போன்ற தனங்களையுடைய பெண்டிரது மாயவலையில் வீழ்ந்து வருந்தாது, என்று யான் நின்னடியார்க்கு அடியனாக விழைவேன்? சங்குக் கூட்டங்களினின்றும் முத்துக்கள் தோன்றும் சக்கர தீர்த்தம் என்னும் தடாகத்தையுடைய திருமகள் உறையும் திருப்புல்லாணியில் எழுந்தருளியிருக்கும் செங்கண் மாலே!

3. மாலையிலே முகங்காட்டி மெய்காட்டி
முலைகாட்டி மைக்கண் காட்டி
மூலையிலே இடங்காட்டிப் பொய்யாசை
காட்டும்மின் னார்மோக மாகும்

ஆலையிலே சிக்குழக்கா யலைவேனை
எந்நாள் வந்தாள்வாய் சூதச்
சோலையிலே குயிலிசைக்க மயில்நடிக்கும்
*புல்லைநந் தாச்சுருதி யானே.

(பொ-ரை) மாலைப் பொழுதில் தன்னை ஒப்பனை செய்துகொண்டு முகத்தையும், உடலழகையும், மார்பகங்களையும், இவைகட்கு மேலாக மை தீட்டிய கண்களையும் காட்டிப் பின்னர் பொய்யாசையையும், அவ்வாசையை நிறைவு செய்வதற்கேற்ற தனிமையான இடத்தினையும் காட்டி அழைக்கும் பெண்களின் மோகமென்னும் ஆலையிலே சிக்கி உழலுகின்ற என்னை, இசைக்கும் குயில்களும் நடிக்கும் மயில்களும் நிறைந்த மாஞ்சோலைகளுக்கிடையேயமைந்த திருப்புல்லாணியில் வேதவடிவாய் விளங்கும் வித்தகா! நீ என்று வந்து ஆட்கொள்வாய்!

4. நந்தானைக் கரமணிந்த நந்திதன்னைக்
காமனேடு நளினத் தானை
தந்தானைப் பசுந்துளவத் தாரானைச்
சகலசரா சரங்கள் வாழ
வந்தானை யிரண்டுகொங்கை வாரானை
யொத்ததிரு மருவுங் கீர்த்திச்
சிந்தானைச் சிந்தனைசெய் தார்க்கருள்வான்
மருவுபுல்லைச் செழுங்காட் டானே.

(பொ-ரை) சிறிதும் நலியா திருப்பவனும், நஞ்சைக் கண்டத்திலே கொண்ட சிவபெருமான், காமன்,

---

* புல்லை யெந்தாய் எனவும் பாடம்.

தாமரையில் வீற்றிருக்கும் பிரமன் முதலியோரைத் தந்தவனும், பசுமையான துளபமாலை யணிந்தவனும், உலகில் உள்ள அசையும் பொருளையும் அசையாப் பொருளையும் வாழவைக்க அர்ச்சாரூபியாய் வந்தவனும், இரண்டு கொங்கைகளையுடைய இலக்குமிதேவி உறைதலால் நீங்காத புகழ் பெற்றவனும் ஆகிய, திருப்புல்லாணி என்னும் தர்ப்பைக் காட்டில் அமர்ந்திருக்கும் பெருமான், தன்னைச் சிந்தனை செய்வார்க்கு என்றும் அருள்புரிவான்.

5. **காட்டானைக் குறுதுயரங் காட்டானைத்**
திருமருவிக் களிக்குஞ் செம்பி
நாட்டானைப் பவத்திலேயமை நாட்டானைக்
கசடரை எந்நாளும் சேர
மாட்டானைப் புரந்தபசு மாட்டானைப்
பிறவி தனில்வணங் கினோரை
வீட்டானை பரமபத வீட்டானைப்
புல்லை யினும்விரும்பு வோமே.

(பொ-ரை) கஜேந்திரன் என்னும் காட்டு யானைக்கு ஏற்பட்ட துன்பத்தைக் காட்டாதவனும், திருமகள் விரும்பிக் களிக்கும் *செம்பிநாட்டானும், பிறவியிலேயே நிலைத்துவிடாமல் காப்பவனும், தீயோரைச் சேராதவனும், ஆநிரை காத்தோனும், பிறவியில் தன்னை வணங்கினோரைக் கைவிடாதவனும், பரமபத வீட்டானுமாகிய திருமாலைப் புல்லாணியில் நாம் வழிபடுவோம்.

---

* சோழ நாட்டையும் ஒரு காலத்தில் சேது மன்னர்கள் வென்றமை கருதி சேதுநாடு செம்பிநாடு எனவும் பெயர் கொண்டது.

6. விரும்பாலை இகழ்ந்தரசை விரும்பிவளர்
புல்லாணி விமலர் தாளில்
அரும்பாலைப் பலகனியைச் சொரிந்துபணி
யாமல் எந்த ஞாசையாலே
கரும்பாலைதனி லுழன்ருப்போல் மடவார்
மீதில்என்றுங் கருத்தை வைத்தேன்
சுரும்பாலைச் சிலைமாரன் அரும்பாலே
மதிமயங் கித்துடிக்கின் றேனே.

(பொ-ரை) விரிந்த பாற்கடலை விட்டு (தலவிருட்ச மாகிய) அரசை விரும்பி புல்லாணியில் உறையும் விமலனே! உன் தாளில் பாலையும், பல கனிகளையும் சொரிந்து வழிபடாமல், என் சிற்றின்ப ஆசையால் ஆலையில் கரும்பு அவதியுறுவதுபோல் மடவார் மீதில் ஆசைகொண்டு, மாரனது மலர்க்கணைகளாலே மதி மயங்கி வாடித் துடிக்கின்றேன்.

7. துடித்தானைக் கருள்கருணைத் துடியானை
அரக்கர் கிளைசோரச் சோர
அடித்தானைக் கமலமல ரடியானை
பாரதப்போர் அனைத்துந் தானே
முடித்தானை மணிமகுட முடியானை
இடையர் நெய்பால் முழுதும்வாரிக்
குடித்தானைப் புல்லாணிக் குடியானைக்
கருமுகி லைக்கும்பிட் டோமே.

(பொ-ரை) முதலை, யானையின் காலைப் பற்றிக் கொள்ள, துடித்து அலறிய அவ்வியானைக்கு அருள் செய்யத் துடித்தவனும், அரக்கர் குலங்களை அடியோடு

அழியுமாறு கொன்றவனும், தாமரை மலர் போன்ற திருவடியையுடையவனும், பாரதப் போரினைத் தானே முன்னின்று முடித்தவனும், ஆயர்குடியில் நெய், பால் அனைத்தும் ஆவலாய் அள்ளியுண்டவனும், புல்லாணி யில் கோயில் கொண்டவனுமாகிய கார்முகில் வண்ணனை வழிபடுவோம்.

8. **கும்பிடுவார் மேனியெங்குங் குழைத்திடுவார்**
மதிமயங்கிக் கோயில் தோறும்
நம்பிடுவார் போற்றிரிவார் நமனூருக்
காளாகி நரகில் வீழ்வார்
வம்பிடுவார் முலைத்திருமான் மருவுபுல்லைப்
பதிமாலை வணங்கு மூரிக்
கம்பிடுவா ரலைமுழக்கக் கடலேட்டார்
பிறவாத கதிதொட் டாரே.

(பொ-ரை) உடல் குழைந்து கும்பிடுவோர் பல கோயில் தோறும் சென்று கடவுள் நம்பிக்கை கொண் டவர்போல் திரிந்து, போலியாக வாழ்ந்து நமனது பற் றுக் கோட்டில் அகப்பட்டு நரகில் வீழ்வர். மணம் நிறைந்த மார்பினையுடைய திருமகளை மருவும் புல்லைப் பதி மாலை வணங்கி, அலைமோதும் புல்லாணிக் கடலில் மூழ்கினோர் பிறவா நிலையை எய்துவர்.

9. **தொட்டளக்க வெண்சாணுஞ் சாணுகிப்**
புல்லரைச் செஞ்சொல்லாற் பாடி
எட்டெழுத்தை ஓதாம லேலெழுத்தை
எக்காலும் இயம்பு வேனே ?

மட்டிருக்கும் செங்கமல மாதிருக்கும்
மணிமார்பா! வணங்கிப்போற்றும்
சிட்டருக்கே அருள்புரியும் புல்லாணி
மருவுதெய்வச் சிலைவல் லோனே!

(பொ-ரை) என் சாண் உடலை ஒரு சாணுக்குப் புல்லரைப்பாடி, எட்டெழுத்து மந்திரம் (திருவஷ்டாட்சரம்) ஓதாமல், பிச்சை புகும் சொற்களைப் பாடி வாளாயிருப்போனே! நீ அறிவாயாக. புல்லாணியில் கோயில் கொண்டருளுபவனும், தேனிருக்கும் செந்தாமரை மலரில் உறையும் திருமகள் கேள்வனும், தன்னை வழிபடும் சிட்டருக்கே அருள் புரியும் பண்புடையவனும் தெய்வச் சிலையானே ஆவான்.

10. வல்லாடுஞ் சாண்குழிக்காய் இல்லாத
பொய்களெல் லாம்வாயாற் சொல்லிக்
கல்லான நெஞ்சினர்பால் செல்லாமல்
நின்கருணை காட்டாய் ஐயா
நல்லாரும் எனைப்போன்ற பொல்லாரும்
பரகதியை நண்ண நாளும்
செல்லாரும் கோபுரம்சூழ் புல்லாணி
மருவுதெய் வச்சிலையி னானே.

(பொ-ரை) வலி நிறைந்த ஒரு சாண் வயிற்றுக்காக அளவில்லாப் பொய்களைக் கூறிக் கல் மனமுடைய கயவர்கள்பால் செல்லவிடாமல், உன் கருணை காட்டி என்னை அருளுக! நல்லோரும், எனைப்போன்ற தீயோரும் மோட்சவீட்டை அடையவேண்டி, மேகம் நிறைந்த புல்லாணியில் கோயில் கொண்டருளிய தெய்வத் தன்மை பொருந்திய வில்லையுடையோனே!

[வேறு]

11. நானே புல்லைப்பதி பிறந்தே
 னல்லேன் அவ்வூர் தனில்வசிக்கத்
தானே கிடையெனுகி லந்தோ
 சமனே பிடிக்கத் தளர்வேனே
தேனே இனிய தெவிட்டாத
 தெள்ளா ரமுதே புல்லாணிக்
கோனே இனியாகிலும் அருள்வாய்
 குருவே! இரவிகுலத் தோனே!

(பொ-ரை) நான் திருப்புல்லாணியிற் பிறக்கவில்லை. அத் திருப்புல்லாணியில் வசிக்க நேர்ந்தால் அதனை நிலையாகப் பற்றத் தளரேன். தேனும், தெவிட்டாத அமுதுமாய் விளங்கும் திருப்புல்லாணித் தலைவனே! சூரிய குலப் பெருமானே! இனியாகிலும் என்பால் கருணை புரிவாயாக.

12. குலத்திற் பெரியோ ராலுலுங்
 குறியரர் தவங்கள் புரிந்தாலும்
நலத்திற் சிறந்த புல்லாணி
 நகரங் கடையோரக் கண்ட
தலத்திற் குரங்காய் சுணங்கினமாய்த்
 தருவாய்ப் புல்லாய்ப் பொல்லாத
மலத்திற் புழுவாய்ப் பிறந்தாலும்
 மறலி முகத்தில் விழியாரே.

(பொ-ரை) பெருங்குடிப் பிறப்புடையோரானாலும், பலதவஞ் செய்தோரானாலும், திருப்புல்லாணியை

அடையாவிட்டால் கடைநிலையில் உள்ளவராய் கருதப் படுவர். புல்லைத் தலத்தில் குரங்காயும், மரமாயும் புழு வாயும் பிறந்தாலும் இயமன் முகத்தில் விழியாத நிலை பெறுவர்.

13. ஆரா வமுதே புல்லாணிக்
கரசே எந்தை பெருமானே
நீரார் சடையா னிரவொழித்த
நிதியேவிதியே துதிக்க வளர்
காரார் முகிலே அடியேற்குக்
கண்ணே கண்ணின் மணியொளியே
தாரார் புயனே பழவடியார்
தானே எனைவந் தாளாயே.

(பொ-ரை) ("எப்பொழுதும், நாள், திங்கள், ஆண்டு, ஊழி ஊழி தொறும், அப்பொழுதைக்கப் பொழுது என் ஆராவமுதமே" என ஆழ்வார் துதிப்பது போல்) தெவிட்டா அமுதாயும், புல்லாணிக்கரசாயும் விளங்கும் கார்முகிலே, உலகினர்க்குக் கண்ணே! மாலை மார்பா, நீ பழவடியார்களைப்போல என்னையும் வந்து ஆட்கொண்டு அருளுவாயாக.

14. தாளா லுலகை அளந்தானும்
தனிமா முதலே இனிதான
வாளார் விழிப்பூ மீதிருந்த
மாதைப் புணரு மணிமார்பா
வாளாய் புல்லைப் பதிக்கிறைவா
வடியார்க் கெளிய பெருமானே!

தோளாற் றுளவத் தொடைசுமந்த
துய்யா கமலக் கையானே!

(பொ-ரை) ஓரடியால் மூவுலகும் அளந்தவனும், ஒப்பற்ற உலக முதல்வனும், திருமகள் கேள்வனும், புல்லைப் பதியானும், அடியார்க்கு எளியவனும், நல்ல மாலைகளை அணிந்த தூயோனும், தாமரை மலர் போன்ற கைகளையுடைய பெரியோனும் ஆகிய இறைவா! உன்னை வாழ்த்தி வழிபடுகின்றேன்.

15. கையால் மலர்கொண் டருச்சிக்கக்
காதா லுனது கதைகேட்க
மெய்யால் வணங்கி முடிதாழ
விழியால் உனைக்கண் டன்புருகத்
துய்யா வரந்தா குலிசனயன்
தொழிலைத் தரினும் அதுவேண்டேன்
எய்யார் கமலமகட் புணர்ந்த
நிதியே புல்லைப் பதியானே!

(பொ-ரை) கை, மலரைத் தூவி நின்னை அருச்சிக்க, காது உன் புகழைக் கேட்க, மெய் உன்னை வணங்கி வீழ, தலை தாழ்ந்து வணங்க, கண்கள் உன்னைக் கண்டு ஆனந்தக்கண்ணீர் பெருக்க நான் விரும்புகின்றேன். இதனையன்றிப் புல்லைப் பதியானே! குபேரன் பிரமன் தொழிலை எனக்குத் தரினும் அதனை யான் வேண்டேன்.

16. பதியார் பவத்தி லுருவெடுக்கப்
பாரார் பாரானதி லினிமேல்

விதியாரவர் பானமைச் செல்ல
விதியார் துதியாய் மடநெஞ்சே!
ததியானதை வெண்ணெயைத் திருடி
தாம்பா லடித்துந் தாம்பாலே
மதியா தெடுத்தோர் புல்லையெந்தை
மணந்தே பொன்னைப் புணர்ந்தோரே.

(பொ-ரை) இவ்வுலகாகிய ஆழியில் இனிமேல் பிறவி எடுக்காவாறு விதிக்குத் தலைவனுகிய உன்னை வழிபடுவார்கள். நீ எத்தகையோன் எனில் தயிரையும், வெண்ணெயையும் திருடியமையால் தாம்பாலடிபட்டு வருந்தியவன். மேலும் புல்லைப்பதியில் கோயில் கொண்டருளும் தலைவன் நீயே ஆவாய்.

17. பொன்னைப் புவியை மனைவியரைப்
புதல்வர் தமைக்கண் டுருகியென்றுந்
தன்னை மறந்த கொடியோரே!
சமன்வந் தழைத்தா லென்செய்வீர்!
என்னைப் புரக்கும் புல்லாணி
இறைசேர் பூமீதிருந் தரசாள்
மின்னைப் பணிந்தால் இகபரத்தில்
விளங்கும் சிறப்பே பெறுவீரே!

(பொ-ரை) இடையருது பொன்னையும், உயிரையும், உற்ருரையும் மனைவியரையும், மக்களையும் மற்ருேரையுமே எண்ணி மறுமையைச் சிந்திக்காமல் உழலும் மாந்தர்களே! இயமன் வரும்போது என் செய்குவீர்! இம்மை, மறுமைப்பயனை நீவிர் ஒருங்கு பெற விழையின் உடன் புல்லாணிக் கரசைப் புகழ்ந்தேத்துமின்.

18. சிறப்பைப் பொழியும் புல்லாணித்
தேவ னரசு நிழலிற்கார்
நிறப்பை யரவிற் கண்டுயிலும்
நீல மலைதன் னடியார்கள்
பிறப்பை யொழிப்பான் வினைப்பயனாற்
பிறந்து தொழுதோர் நினைத்தபடி
இறப்பைப் பிடுங்கி வெறும்வெளியில்
இருப்பீ றெனச்சே கரிப்பானே.

பொ-ரை) சிறப்பைப் பொழியும் திருப்புல்லாணிக் கரசன் மேகம் போன்ற கருநிறமுடையன், அரசமரத்தின் நிழலில் ஆதிசேடன்மீது கண் துயிலும் பெரியோன். இவன், தன்னை வழிபடும் அடியார்கள் பிறவித் துன்பம் ஒழிப்பான். மேலும், வினைப் பயனால் மானிடராய்ப் பிறந்து பின் புல்லாணிக்கரசை வழிபடும் நல்வினையுற்றோர்க்கு இறப்பை நீக்கி பரமபத மென்னும் வான் வெளியிலே என்றும் இருக்குமாறு கொண்டு சேர்ப்பான்.

19. கரிக்கன் றுதவும் பெருமானைக்
கருத்தாய்த் துதிப்போர்க் கின்பமெலாம்
தெரிக்குந் திருப்புல் லாணியனைத்
தெரிசித் தேசற் றொழியாமல்
விரிக்குங் கமல முகம்காட்டி
விலைக்கே காம னிறுத்திவிற்கும்
வரிக்குங் குமப்பூண் முலைமாதர்
மாய வலைக்குட் டுவண்டேனே.

(பொ-ரை) யானைக்கு அன்று உதவிய பெருமானை உள்ளத்தில் எண்ணியோர்க்கு எல்லா இன்பங்களையும் தரவல்லவன் திருப்புல்லாணிக்கரசன். இவ்விறைவனை வழிபடாமல், தாமரைமுகம் காட்டிக் காமத்தை விலைக் களிக்கும் பரத்தையரது வலைக்குட்பட்டுத் துவண் டொழிந்தேன்.

20. வண்டு துளவும் பசுந்துளவ
மாலை யிருந்த மணிமார்புந்
தண்டு தவர்வா ளாழிசங்கந்
தரித்த கரமு மலர்முகமும்
கொண்ட லனைய மெய்யழகும்
குழைக்கா தழகும் திருவடியும்
கண்டு தொழுதால் மருவுபுல்லைக்
காட்டான் பிறவி காட்டானே.

(பொ-ரை) வண்டு துழாவும் துளசி மாலை தரித்த அழகிய மார்பகமும், தண்டு, சக்கரம், சங்கு, வில், வாள் என்னும் பஞ்சாயுதங்களை ஏந்திய திருக்கரங் களும், தாமரை மலர் போன்ற திருமுகமும், மேகம் போன்ற திருமேனியும், குழையணிந்த காதும், திருவடி யும் ஆகிய இவ்வுறுப்புக்களைக் கண்டு வழிபட்டால் புல்லைப் பதியான் நமக்குப் பிறவியைக் காட்டான்.

21. காட்டிலெறித்திடு நிலவுபோலும் பொன்னைக்
கடனடுவிலே கவிழ்த்தாற் போலும்வண்ட
மாட்டினுக்கு விலைகொடுத்தாற் போலும்புல்லர்
மனைதோறும் கவிபாடி மனம்புண்ணாகிப்

பாட்டினுக்குப் பரிசுபெறப் புலவீர்! வேண்டும்
படியுமக்கே இகபரமும் பகிர்வான்தேரை
மூட்டிவிசயனுக் கூர்ந்தபாகன் புல்லை
முகுந்தனையே துதித்திடுவீர் முழுதுந்தானே.

(பொ-ரை) காட்டிலெறியும் நிலாப் போலவும், பொன்னைக் கடனடுவில் கொட்டினாற் போலவும் புல்லாது வீடுதோறும் சென்று அவர்கள் மீது கவிதை புனைந்து மனம் புண்ணாகிப் பரிசு பெறாத புலவர்களே! விசயனுக்குத் தேரோட்டியாயமர்ந்த புல்லையில் கோயில் கொண்டருளும் முகுந்தனை வழிபட்டால், வேண்டும் இகபரநலம் எல்லாம் எய்துவீர்கள்.

22. முழுதுமாய்ப் புலையரேனும் கொடியோரேனுங்
மூடரேனும் கடையார்கெட்ட மூர்க்கரேனும்
அழகாகத் திருவரசைக் கண்ணாற்கண்டோர்
அவர்காணும் பொன்னுலகா ளமரராவார்
தழல்வேள்விக் குளரேனும் தக்கோரேனும்
சதுர்மறை கற்றோரேனும் தவத்தோரேனும்
பழவேதப் பொருள்துதிக்குந் திருப்புல்லாணிப்
பதியினைக் கண்டறியாதார் பதிதர்தாமே.

(பொ-ரை) மாயத் தன்மை பொருந்திய புலையராலும், கொடியோராலும், அறியாத கடையர்களாலும், மூர்க்கராலும், புல்லாணிக் கரசைக் கண்டோர் தேவருலகு ஆள்வார்கள். வேள்விக் குரிய அந்தணராயினும், நான்கு வேதங்களைக் கற்ற தவத்தோராயினும், வேதங்கள் வழிபடும் புல்லாணியினைக் காணாதவர் பெரும் பாவிகளே யாவர்.

23. பதிதொறும் போயுலைந்துபுல்லர் முகத்தைப்
[பார்த்துப்
பற்காட்டிச் சொற்காட்டிப் பணத்தைத்தேடி
மதியிழந்து மனைவிமக்க ளாசாபாச
வலைக்கழிவீர் அலைக்கழிக்கு மறலிவந்தாற்
கதியுமக்கார் விதிவிலக்கி ஒருவர்வந்து
கைகொடுப்பா ருளரோவெக் காலும்புல்லைக்
கதிபதிமாதவ முகுந்தா வென்றுற்போதும்
ஐயமில்லை நமனைவெற்றி செய்யலாமே.

(பொ-ரை) ஊர் தோறும் சென்று கயவர் முகத்தைக் கண்ணுற்றுப் பல்லையும், சொல்லையும் காட்டிப் பணந்தேடி அறிவிழந்து உற்றார், உறவினர் என்ற பாசவலையில் வீழ்ந்தலைவீர்காள்! துன்புறுத்தும் இயமன் வந்தால் அப்போது என் செய்வீர்கள்! நம் விதியை விலக்கிக் கை கொடுப்பார் யாருளர்? திருப்புல்லாணியின் அதிபதியின் திருநாமங்களை ஓதினால் போதும்; நாம் இயமனை எளிதில் வெல்லலாம்.

24. செய்யிலே சாலிமுத்த நிலவுகாட்டுந்
திருப்புல்லாணி யின்மருவும் சீமான்கோமான்
மையிலே தோய்ந்தவிழிப் பொதுவர்மாதர்
மனைதொறும் பொய்வரைஎல்லா மயக்கிச்
[சேர்ந்தும்
பொய்யிலே முழுகிநின்று தயிர்பால்வெண்ணெய்
புலனறிந்து திருடியுண்டு போட்டுவின்றுன்
நெய்யிலே கையிடவும் *.... ....

---

* கடைசியடி ஏட்டுப்பிரதியில் காணப்படவில்லை.

(பொ-ரை) திருப்புல்லாணி நகர் வயல்களில் முத்தும், நெல்லும் ஒளியுற்றுப் பிரகாசிக்கும். ஆயர் இல்லங்களிலும், பெருமலைகளிலும் உறைந்தும் திருமால் தயிர், பால் வெண்ணெயைத் திருடியுண்டும் பல ஆடல்கள் நிகழ்த்தியுள்ளார். அத்தகு தெய்வச்சிலையானின் திருவடிகளைச் சார்வோமாக.

28. பொருப்பையா னினங்காக்கக் குடையாய்மேனுட்
பொற்கரத்தால் எடுத்தவன்சேர் [புல்லாணிக்கே
இருப்பையா கிலும்இருப்பார்க் கேவலேனு
மெனியேனுக் கிவ்வளவிங் கேலுமானல்
வெருப்பையா டரவிணைவிட் டரசின்கீழே
விருப்புறப்புற் பரப்பிஆங்கண் விரும்பித் [தாங்குந்
தருப்பையா னெனக்கினிமேற் கருப்பையான
தனுப்படையான் றனுப்படையான் [சங்கத்தானே.

(பொ-ரை) கோவர்த்த மலையைக் குடையாய் எடுத்துப் பசுநிரைகாத்த பரந்தாமன் உறையும் திருப்புல்லாணியில் குடியாயுள்ள மக்களுக்குப் பணிசெய்யும் பேறு எனக்குக் கிட்டுமாகில் ஆடுகின்ற படங்களையுடைய ஆதிசேஷனையும் விட்டு அரசமரத்தின்கீழ் விருப்பத்

குறிப்பு :— 25, 26 ஆகிய எண் செய்யுட்கள் ஏட்டுப் பிரதியில் இடம்பெறவில்லை.
27-ஆம் எண் செய்யுளும் ஓரிரு அடிகளோடு மட்டுமே காணப்படுகின்றது.

தோடு தருப்பையைப் பரப்பி அதன் மீது உறங்கு பவனும், வில்லையும், சங்கையும் ஏந்தியவனுமான பரந் தாமன், கருவாகிய பையிலே தோன்றும் உடலை மறு படியும் எனக்கு அளிக்கமாட்டான்.

29. சங்கத்தா னவரைவென்ற தேவேபுல்லைத்
தனிமுதலே கனியமுதே தாணுவேபொன்
னங்கத்தாய் நவநீதசோரா கண்ணு
அரிமுகுந்தா கோவிந்தா அடியேற்காவி
மங்கத்தா னவதியிட்டுக் கருங்கடாவில்
மறலிவரு முனமவனை யெப்போதும்மே
துங்கத்தா னவமலர்ப்பொற் பாதங்காட்டித்
துணையிருந்து தாரகத்தைச் சொல்லுவாயே.

(பொ-ரை) பெருந்திரளான அசுரர்களை வென்ற பெருமானும், திருப்புல்லாணியில் கோயில் கொண்டரு ளும் உலகின் தனிநாயகனும், அமுதும், பழுத்தகனியும் ஆகிய, என்றும் மாறாத இயல்புடைய, பொன்போல் எழில்பெற்ற திருமேனியுடைய, வெண்ணெய் திருடி யுண்ட கண்ணா, ஹரி, முகுந்தா, கோவிந்தா, என் ஆவி சோரும் இறுதி நிலையில் இயமன் தன் எருமைக்கடாவில் வந்து என்னை அச்சுறுத்தும் முன்னே அவனை விலக்க வல்ல உன் பொற்பாதங்காட்டி என்னை ஆட்கொள் வாய்! அதற்கேற்ற தாரக மந்திரத்தை எனக்குக் கூறுவாய்.

30. சொல்லுவதெல் லாமவத்தம் கருமமெல்லாம்
துறைமோச நிறைகளில்லாத் தூர்த்தனாகி
அல்லல்வினைச் சாக்காட்டைப் பற்றினேனை
அன்பாக வளர்த்தெனை அடிமைகொள்வாய்

* எல்லையிலாப் பிறவியினில் அழுந்திஎன்றும்
எண்பொருளை ஆராயா எளியனாய
புல்லனென யாவருமே புகலாவாறு
† புல்லைநகர்த் தூயவனே அருளுவானே.

(பொ-ரை) உன் பெயரையே கூறுவதல்லாமல், தவறான வாழ்க்கையில் உழலும் தூர்த்தனாகிய என்னை அன்பாக வந்து அடிமை கொள்ளுவாயாக. பல்பிறவி தோறும் பிறந்து, உண்மைப் பொருளை ஆராயாது உழன்று கொண்டிருக்கும் என்னை, புல்லை நகரத் தூய திருமாலே! புல்லனென யாரும் கூறாதவாறு அருள்வாயாக.

[வேறு]

31. வானம் புவிகால் கனலுட னீரை
வகையால் வையத் துருவாகித்
தானம் புயனார் விதியத னாலே
தளர்வா மல்லாற் படுவேனோ
யானந் தனிநா னடியவ ராலோ
ரடியே னுள்ளத் தறிவாகு
மோனந் தருஞா னமுமுத வாதெனல்
முறையோ புல்லைக் கிறையோனே.

---

*இப்பாடலில் உள்ள இறுதி இரண்டடிகளும் ஏட்டுச் சுவடியில் காணப்பெறாமையால் தொகுப்பாசிரியரே எழுதிச் சேர்த்துள்ளார்.

† 'புல்லைநகர்த்தூயவனே' என்ற வரிமட்டும் காணப்படுகின்றது.

(பொ-ரை) நீர், நெருப்பு, காற்று, பூமி, விண் ஆகிய பஞ்சபூதங்களின் சேர்க்கையால் இவ்வையத்தில் உடலெடுத்து பிரமனின் விதியால் பிறவியுள் சிக்குண்டு வருந்தும் என்னை நீ கொடுத்த ஞானம் காக்கவேண்டும். அடியவர்க் கடியனை எனக்கு அது உதவாதென்று கூறுதல் எவ்வகையாலும் முறையற்ற செயல். புல்லை நகரத்து புகழோனே! இதுவே யான் செய்யும் விண்ணப்பம்.

32. புல்லைக் கிறையோ னடிபணி யாதார்
புவிமேல் வெகுயோனிக டோறும்
தொல்லைக் கடனேர் பிறவியில் வீழ்வார்
துயரான் மெலிவா ரவர்காணும்
அல்லைப் பகலே வரவுசெய் மாலோ
னடியே தொழுவார் பரமாகும்
அல்லைப் பெறுவார் புவிமே லிதமாய்
மதியே மதிதா மதியாதே.

(பொ-ரை) திருப்புல்லாணிக் கிறைவனுகிய திருமாலை வணங்காதோர் பல பிறவிகள் பிறந்து பழவினையோடு துன்பக் கடலில் உழலவார். இரவினைப் பகலிலே வருமாறு செய்த திருமாலின் திருவடியை மறவாதார் இவ்வுலகில் சிறந்த இன்பம் பெற்று வாழ்வார். ஆதலில் என் மதியே! புல்லாணிப் பெருமானின் பொன்னடியை நினைக்கத் தாமதியாதே.

33. மதியா தவனு திகளா கியகோள்
வலுவா னம்மைச் சருவாதே
எதிர்கா லனுமோ டுவனே மலரோ
னினிமேல் மண்ணில் படையானே

நிதிசேர் அளகா புரிநேர் வளமை
நிறைசீர்ப் புல்லைப் பதிமாலே
கதியா மெனவே துதியாய் மதியே
கருதாய் எண்ணிக் கருதாயே.

(பொ-ரை) சந்திரன், சூரியன் முதலிய கோள்களும், அநாதிகளாக விளங்கும் பிற நாளும், கோளும் அளகாபுரியை யொத்த திருப்புல்லாணியில் விளங்கும் திருமாலைத் துதித்தால், அவ்வாறு துதித்தவர்களைச் சார்ந்து துன்புறுத்தாது. மேலும் நம்மை எதிர்க்கும் இயமனும் கோள்களும் சாராது. பிரமனும் நம்மைப் புவிமீதில் மறுபடியும் படைக்க மாட்டான். ஆகையால் புல்லைப்பதியானை, நெஞ்சே, நீ மறவாமல் நினைவாயாக.

*

35\. **எழுதா ரணியாய்ப் பரிதேர் பணியா**
டைகள்சேய் மல்லர்க் கெழிலானை
முழுமா மதிநேர் முகமாதர் கண்மா
முதல்சேர் செல்வத் தினராஞேர்
செழுமா மலர்மீ துறைவாள் நிதம்வாழ்
திறமார் புல்லைப் பதியோனைத்
தொழுமா தவர்பூ வடிமீ தினிலே
தொழவே மெய்யுற் றவர்தாமே.

(பொ-ரை) சிறந்த மாலை யணிந்தவரும், பரியும் தேரும் பட்டாடையும் அணிந்து எழில்பெற விளங்குபவரும், மாதர்கட்குத் தலைவியாம் மலர்மீதுறையும் திரு

* 34-ஆம் செய்யுள் ஏட்டுப்பிரதியில் கிடைக்கப்பெறவில்லை.

மகள் உறையும் திருப்புல்லாணித் தெய்வச் சிலையானை வழிபடும் பெரியோர்களின் திருவடித் தாமரையைத் தொழுதாலே மெய்ஞ்ஞானம் பெற்றவராய் யாவரும் விளங்குவர்.

36. மெய்யுற் பனமா கியமா தவனே
விரைசேர் புல்லைப் பதியானே
மையுற் றழகார் திருமே னியனே
வரதா வள்ளைக் குழையோனே
துய்யக் கமலா தனிநா யகனே
துளவார் மல்லுற் றிடுதோளா
கையுற் றிடுமா ழியனே சரணு
கதிநீ யல்லல் தவிராயே.

(பொ-ரை) மெய்ப் பொருளாகிய மாதவா, நல்ல மணம் பொருந்திய தர்ப்பைக் காட்டிற் குரியோனே, மைநிறவண்ணா, வள்ளைச் செடியின் இதழ்போன்ற குழையணிந்த காதையுடையோனே, திருமகள் கேள்வனே, மற்போர் நிகழ்த்தும் தோளையுடையாய், திருவாழி ஏந்திய திருக்கரம் உடையானே, நீ என் துன்பங்களை விலக்கி அருள்வாயாக.

37. தவிரா வினையா லுழல்மா னிடரே
தரைமீ தையப் படுவானேன்
புவிரா சரையே கதியா மெனவே
புலையே செய்யத் துணிவானேன்
அவிரா தவனா ரணியா ளியராய்
அழகார் புல்லைப் பதியாரா
கிவிரா தனையே வெலுமால் சரணு
கதியா லுய்யப் பெறுவீரே.

(பொ-ரை) நீங்காத தீவினையால் உழல்கின்ற மானிடரே! தரையிற் பிறந்து இயமனுக்கஞ்சி வாழவும் வேண்டாம். இவ்வுலகாளும் மன்னர்களையே கதியாக எண்ணி பாவஞ் செய்யத் துணியவும் வேண்டாம். வேள்விகளியற்றும் அந்தணர்களின் குழாங்களைக் காத்தளிப்பவனும், அழகு பொருந்திய புல்லை நகரில் கோயில் கொண்டவனும், விராதனென்னும் அரக்கனை வென்றவனுமான திருமாலைச் சரணமடைந்து உய்யப் பெறுவீராக.

38. உய்யப் பெறவே புல்லைக் கதிபா
உனையே பணிவே னினிவேறிவ்

வையத் தினிலோர் தெய்வத் தினையான்
மதியான் மதியேன் மதியேனே

பையக் கிருபார் செல்வத் துரையே
பரமா அடியே னிடர்தீராய்

செய்யத் திருமான் மெய்யிற் புணரா
திபனே குருவே அருள்வாயே.

(பொ-ரை) யான் இவ்வுலகில் உய்வதற்கு உன்னையே வணங்குவேனேயன்றி, புல்லைக்கதிபா! வேறு ஒருவரை ஒரு பொருளாக மதியேன். அருள் நிறைந்த பெருமானே, அடியேன் துன்பத்தைப் போக்குக. திருமகள் கேள்வனாகிய குருவே! நீ அருளுக.

39. வாயே துதியாய் கரமே தொழுவாய்
மதியே மதியாய் புல்லாணித்

தாயே பதுமா சனியே அருள்வாய்
தயவாய் இதுவே யல்லாமற்

பேயே மறுதே வர்களைத் திடவே
பிரமியா ததனின் மெய்யாக
நீயே திருமா மகள்பூ வடிமேல்
இணைவாய் நினைவே வின்னாயே.

(பொ-ரை) வாய் இறைவனை வாழ்த்துக. கரம் அவனையே தொழுக. தாமரை மலர்மீது உறையும் திருமகளே! உன்னை என் அறிவு இடையறாது ஆராய்க. இதனையன்றி வேறு தேவர் குழாத்தைக் கண்டு பிரமித்து வியக்காதவாறு மெய்யாக நீதான் முழுமுதல் வாய் இடையறாது கூறுக. உன் பொற்பாதங்களையே என் நெஞ்சம் சேர்வதாக.

40. வின்னத் தருமே புல்லைப் பதிவாழ்
விரைசேர் பதுமா தனிசீர்மை
யெள்ளத் தனைதா னுள்ளத் தறிவா
ரெழில்சே ரடியா ருலகாள்வர்
வள்ளத் தினையே யிணையா வருசீர்
வளமா முலைமா மகள்சேவை
தெள்ளத் தெளிவார் செல்வத் தினையார்
தெரிவார் தெரியார் பூமீதே

(பொ-ரை) புல்லைப்பதியில் வாழும் மணம் பொருந்திய தாமரை மலரில் உறையும் இலக்குமியைச் சிறிது நேரமாயினும் சிந்தித்தால் இவ்வுலகினை ஆளும் திருவைப் பெறுவர். இல்லாவிடில் அருளற்றோர் செல்வத்தைப் பிறர் மதியார்,

[வேறு]

41. புவியாகிக் கடலு மாகிப்
பூதரங் கனல்விண் காலாய்

விவிதமா மனந்த கோடி
விளங்குபல் லுயிர்க்கங் கங்காய்

நவில்சரா சரங்க டோறும்
நடத்தியே கலந்து நிற்கும்

அவிரொளி மணியைப் புல்லை
யரசினீ ழலிற்கண் டோமே.

(பொ-ரை) பஞ்சபூத வடிவமாகி, எல்லையற்ற பொருள்களிலும் நீக்கமற நிறைந்து நிற்கும் தன்மை யுடையதாய், மேலும் அத்தகைய சராசரப் பொருள் களை இயக்கி, அவைகளோடு இரண்டறக் கலந்துநிற்கும் மணிபோன்று ஒளிரும் மாலே, உன்னை நான் திருப்புல் லாணியில் அரசமரத்தின்கீழ்க் கண்குளிரக் கண்டு கொண்டேன்.

42. கண்டபொன் வண்டு வண்டிக்
கால்கட லலைகாற் ருடி

வெண்டயிர் மத்து மின்னல்
வீசுபம் பரமிவ் வாருய்

பண்டையின் வினையாற் சுற்றும்
பலப்பல பிறவிக் காளாய்க்

கொண்டலை வீர்காள் புல்லைக்
கொண்டலைத் துதித்தி டீரே.

(பொ-ரை) பொன் வண்டு, வண்டிச்சக்கரம், கடல் அலை, காற்றாடி, வெண் தயிர் கடையும் மத்து, பம்பரம் இவைபோன்று நிலையில்லாமல் சுழன்று சுழன்று வருகின்ற பிறவிச் சுழியிலே அலைபட்ட மக்களே, திருப்புல்லாணியில் கோயில்கொண்டருளும் கருமேகத்தைத் துதித்து வாழ்க. அவ்வாறு வாழின் உங்கள் பிறவிச் சுழல் தடைப்படும். நீங்களும் உய்யலாம்.

43. கொண்டலைத் திருப்புல் லாணிக்
குரிசிலை ஆலின் மீதே
பண்டலைக் கடலிற் றூங்கும்
பரமனைக் கண்டு தாழ்ந்து
வண்டலை வண்ணற் றூய
விரைமலர் சொரிந்து போற்ற
கண்டலை வாய்கை கோடி
கமலத்தோன் படைத்தி லானே.

(பொ-ரை) மேகநிறத்தோனும், திருப்புல்லாணிக்குத் தலைவனும், ஆலிலைமேல் கடலிற்றூங்குவோனும் ஆகிய பரமனைக் காண்பதற்கும், வணங்குதற்கும், போற்றுதற்கும், நறுமலர் சொரிந்து அருச்சித்தற்கும் கண், தலை, வாய், கை ஆகிய உறுப்புக்களை இறைவன் கோடி கோடியாய் எனக்குப் படைக்கவில்லையே, என் செய்வேன் யான்.

44. படைத்தவா கனந்தேர் யானை
பரிசன நிதிமின் னார்கள்
கடைத்தலை வாசல் காப்பார்
கனகதண் டிகைசு தெல்லாம்

புடைத்தலைத் துயிரைக் காலன்
பெறும்பொழு துதவா தொன்றுஞ்
சடைத்தலை அடைவீர் புல்லைத்
தாணுவை நினைத்தி டீரே.

(பொ-ரை) பெரும் படைகளையும், போர்க்களத்து யானைகளையும், பொருளையும், மின்னலன்ன பெண்டிரையும், வாயில் காப்போரையும் இன்னோரன்ன பல பொருள்களையும் பெற்றிருப்பினும் மானிடர்களே! காலன் புடைத்துண்ணும் கடைசி நேரத்தில் நீவிர் என் செய்வீர். திருப்புல்லாணியில் கோயில்கொண்டருளும் பெருமானை நினைத்திடுவீர்களாக.

45. தாணுவே பரனே தர்ப்ப
சயனத்தாய் புயனத் தானே
வேணுவே யூதுஞ் செல்வா
விமலனே கமலக் கண்ணா
காணுவே னல்லே னுன்னைக்
கருத்துறப் பணியே னுன்றன்
நாணென்று மாயை போக்கி
ஆளுநாள் எந்த நாளோ.

(பொ-ரை) என்றும் மாறாத தன்மையுடைய எந்தலே, தர்ப்பைப்புல்லில் திருவனந்தல் கொள்ளும் பெருமானே, தூய திருமாலே, குழலூதும் கோமானே, தாமரைபோன்ற கண்ணையுடைய தாணுவே, உன்னை என் கண்கள் காணவுமில்லை. உளத்தே நின்னை எண்ணிக் களிக்கவுமில்லை. 'யான்' உனக்குரியவன் என்று என்னை ஏற்று, என் மாயையைப் போக்கி ஆட்கொள்ளும் நாள் எந்நாளோ?

46. எந்தநாள் முதலோ சென்ம
மெடுத்தநாள் கணக்குப் பார்க்கி
லந்தமே தளவே தாரா
லறியலாம் அறிவாய் நீயே
இந்தநாட் பணிந்தே னுன்னை
இசைபெறுந் திருப்புல் லாணி
வந்தநா யகனே சென்ம
வாரிதி கரைக்கண் டேனே.

(பொ-ரை) நான் பிறவி எடுத்த நாள் முதலாகக் கணக்குப் பார்த்தால், முடிவு எது என என்றால் அறிய இயலவில்லை. அதனை நீயே யறிவாய். இன்று நான் வழிபடுகின்றேன். திருப்புல்லாணித் தலைவா! பிறவிக் கடலின் கரையை யான் அடைந்துவிட்டேன்.

47. கரைவுடன் துதித்த பேர்கள்
கற்பகத் துறைவா ரய்யா
தரையினில் வலம்வந் தோர்கள்
சந்திரா தித்த ராவார்
விரைசெறி திருப்புல் லாணி
விமலரைப் பூசித் தன்பாய்
திரைகடற் படிந்தோர் சீர்மை
செப்பவொண் ணாது தானே.

(பொ - ரை) திருப்புல்லாணியில் எழுந்தருளிய பெருமாளைக் கரைந்து உளம் நெக்குருகி வழிபடுவோர் கள் கற்பகத் தருக்கள் நிறைந்த சுவர்க்க உலகினை எய்துவர். திருப்புல்லாணியை இப்பிறவியில் வலம் வருவோர்கள் சந்திர, சூரியர் பதம்பெற்று அமரவாழ்வு

எய்துவர். திருப்புல்லாணி இறைவனை வழுத்தித் திரை கடலில் படிந்து நீராடியவர்கள் பெருமை சொல்லலாந் தரத்ததோ ?

48. செப்புவே னெனக்கு வேண்டுந்
திருவர மொன்றே தென்னில்
இப்புவி தன்னை வேண்டேன்
இனிப்பிறப் பதுவும் வேண்டேன்
துப்புறு கமலன் செய்யும்
தொழிலையும் வேண்டேன் புல்லை
மைப்புயல் வண்ணா என்றன்
மனத்தைஎன் செய்கு வாயே.

(பொ-ரை) இறைவா ! உன்னை வழிபடும் என்னை, 'நீ என்ன வரம் வேண்டுகின்றாய்' என்று வினவினால் இம்மண்ணகமும் வேண்டேன், இனிப் பிறப்பையும் வேண்டேன். பிரமனின் படைத்தல் தொழிலையும் விழையேன். புயல்நிற வண்ணா, என் மனம் உன்னையே வழிபட விழைகின்றது. இம்மனத்தை என்ன வேண்டு மானாலும் செய்க.

[வேறு]

49. மனத்திலே கவடுமாய வஞ்சகத் தொழிலு மாகி
தனத்தையே விரும்பு மின்னார் தனத்திலே உழலீர் [சேர்சொற்
பனத்திலே *...........பணவிடை நேரம் புல்லை
வனத்திலே கருத்தை வைத்தான் மறுபிறப் [பில்லை தானே.

* இங்கு ஓலைச்சுவடியில் சில எழுத்துக்கள் விடுபட்டுள்ளன.

(பொ-ரை) மனத்தில் மாசினையும், செயலில் வஞ்சனையும் பெற்று பொருளையே விரும்பும் பொருட் பெண்டிரின் இன்பமே சிறந்ததென்று உழலாதீர். கனவிலேனும் கணநேரம் புல்லைவனத்தை விரும்பி வாழும் அல்லியொத்த அழகமைந்த மேனியனை வழிபட்டால் மறுபிறப்பு இல்லையாகும்.

50. இல்லைத்தா னென்ன சொல்லா
 லினியத்தான் மணிப்பொற் கோயிற்
புல்லைத்தா னிகர்பொற் பாதம்
 போற்றத்தான் வரமே நாளிற்
கல்லைத்தான் கொடுபார் சூழ்ந்த
 கடலணை கோலிக் கையின்
வில்லைத்தான் வளைத்தி லங்கை
 வேந்தனைச் சினந்த தேவே.

(பொ-ரை) சொல்ல இனிப்பவனும், கடலில் அணை கட்டி வில்லை வளைத்து இலங்கை வேந்தனைக் கொன்றவனுமாகிய இராமபிரான், அழகிய புல்லைநகரில் உறையும் அடியவர்களது அடிகளை வணங்குவோர்க்கு, வேண்டிய வரங்களையெல்லாம் மனமுவந்து ஈவான்.

[வேறு]

51. தேவ நாயகன் திருமகள் நாயகன்
 தினந்தின மடியார்கள்
பாவ நாசனன் புல்லையில் மருவிய
 பழம்பொருள் அனைவோர்க்கும்

சீவ நாயகன் மரகத மலையெனத்
திருவர சடிநீழல்
மேவ றுதியை மதிக்கவும் துதிக்கவும்
விரும்பவும் பெற்றேமே.

(பொ-ரை) தேவர்கட்கெல்லாம் தலைவனும், திருமகள் கேள்வனும், நாடோறும் வழிபடும் அன்பர்களது பாவங்களை நாசஞ் செய்பவனும், திருப்புல்லாணியில் கோயில் கொண்டருளும் முன்னைப் பழம் பொருளும், உலகோர் அனைவர்க்கும் உயிர்த் தலைவனும், மரகதமலையென விளங்கும் பெரியோனும், தலவிருட்சமாகிய அரசின்கீழ் உற்ற அனுதியும் ஆகிய திருமாலை யான் மதித்தும் துதித்தும், விரும்பியும் போற்றி வழிபடுகின்றேன்.

52. பெற்ற செல்வமும் பெருமையும் திறமையும்
பெருகிய பெருவாழ்வும்
கற்ற கல்வியும் பொறுமையும் ஞானமும்
கருணையு மறிவாகு
மற்ற மாதவப் பயன்களும் நயங்களும்
மவுனமும் புல்லாணி
யுற்ற மால்பதம் பணிந்தவர்க் கலதுமற்
ெருருவர்க்குங் கிடையாதே.

(பொ-ரை) திருப்புல்லாணியில் கோயில் கொண்டருளும் திருமால் திருவடிகளைப் பணிந்தவர்க்குப் பெற்ற பெருஞ்செல்வமும், பெருவாழ்வும், கற்ற கல்வியும், பெருஞானமும், கருணையும், சிறந்த தவப்பயன்களும் அமைதியும் ஏற்படும். மற்றையோர்க்கு எதுவும் ஏற்படாது.

53. கிடைக்க வேகிடந் திருமலுங் கபமெலாம்
கிறுகிறென் றிழுத்தேநெஞ்சு
அடைக்கும் போதெமன் வந்திழுக் கவும்உயிர்
அங்கிங்கா மனையாட்டி
துடைக்கு வேதலை மயங்குமுன் புல்லைத்
தூயநின் னடிகாட்டிக்
கடைக்கண் பார்த்தெனை ஆளவும் அக்கணம்
கலுழனில் வருவாயே.

(பொ-ரை) இருட்டறைக்குள் கிடந்து இருமிக் கொண்டும், கபமானது நெஞ்சிலே கர கர வென்று ஒலித்துக் கொண்டு நெஞ்சையடைக்கும்போதும், மனையாட்டி மயங்கி நிற்கும் முன் திருப்புல்லாணியில் உறையும் பெருமாளே! நின் திருவடியைக் காட்டி என்னைக் கடைக்கணிக்க நீ கருடனில் ஏறி வருவாயாக.

54. வாயும் சிந்தையும் போயிப் பிரபஞ்சத்தை
மறந்துட றெரியாமற்
பாயும் வெங்கரு மயிடத்தி லெமன்வரும்
பவனியைப் பாராமுன்
நீயும் கஞ்சமின் னுளும்வெங் கலுழனில்
நிமிடத்தில் எதிர்தோன்றித்
தாயும் தந்தையும் போலருள் வாய்புல்லை
தனில்வரும் பெருமாளே.

(பொ-ரை) வாயும், மனமும் செயலற்று இவ்வுலகை மறந்து, வருந்தியலையும்போது, கொடிய எருமையின் மீது இயமன் என்முன் தோன்றுமுன்பே, என் எதிரில் நீ கருடன்மீது தோன்றித், தாயாகவும், தந்தையாகவும் வந்து, புல்லை நகரப்புனிதனே! என்னை அருள் செய்வாயாக.

55. மானே நேர்விழி மனைவிய ரழுவதும்
மைந்தர்கள் கடனூற்றி
ஏனை யாசொலு மெனவும்அங் கேமறுத்
தியம்பவும் தெரியாமற்
பூனை போனிலம் புரண்டுமெய் மறந்துமைம்
பொறிகளும் கலங்காமுன்
கோனை எம்பெரு மானைநம் புல்லையிற்
குரிசிலைத் துதிப்பீரே.

(பொ-ரை) மானைப் போன்ற மருட்சியுடைய கண்களையுடைய மனைவி அழவும், மைந்தர்கள் மரண காலத்தில் செய்யும் கடன்களைச் செய்து நிற்கவும், ஐயா! ஏதேனும் எங்கட்குச் சொல்லுங்கள் என்று இறக்குந் தறுவாயிலிருக்கும் தந்தையை மக்கள் வேண்டவும் அதற்கு அவர் ஒன்றும் கூறாது பூனைபோல் கலங்கியும் மாறுபட்ட இந்நிலைகள் ஏற்படுவதற்கு முன்பே புல்லாணிப் பெரியோனைப் போற்றுவீராக.

56 துதித்திடார் புல்லைமால் திருவடிகளிற்
றெண்டுபட் டாளாகி
மதித்திடா ரகிலேசனைத் தொழுதிடார்
வலம்புரிந் திடமாட்டார்
கதித்தசக்கர தீர்த்தத்திற் படிந்திடார்
கடல்படிந் திடமாட்டார்
கொதித்தவெஞ் சினக்காலன் வந்தாலிந்தக்
குறும்பரென் செய்வாரோ.

(பொ-ரை) திருப்புலலாணியில் உறையும் திருமால் திருவடிகளில் தொண்டு செய்யாமலும், அவரை வழி படாமலும், அவர் உறையும் கோயிலை வலம் வராமலும், திருப்புல்லாணியில் உள்ள சக்கரதீர்த்தத்தில் படியா மலும், புல்லாணிக் கடலின் புனித நீராடாமலும், உள்ள தீயோனுகிய இக்குறும்பன் காலன் வருங்கால் என் செய்குவன் ? ஒன்றும் செய்யான்.

57. செய்ய பங்கயத் தவிசினில் மருவிய
திருமகள் மணவாளா
பைய ராவினில் விழிதுயில் புல்லையம்
பதிவளர் பெருமானே
வைய மீரெழு புவனமும் உந்தியில்
வைத்தகி ருபையாளா
வைய நின்னடி யார்க்கடி யேனென்ற
ஞபத்தைக் காத்தாயே.

(பொ-ரை) சிவந்த தாமரையாகிய ஆசனத்தில் பொருந்தியுறையும் திருமகள் கேள்வனும், அனந்தாழ் வானில் துயிலமரும் புல்லைநகர்ப் பெருமானே ! உலகை யும், பதினுன்கு புவனத்தையும் தன் திருவுந்திக் கமலத் தில் தோன்றச் செய்த ஐயா ! நின் அடியார்க்கு அடிய ஞகிய எனது ஆபத்தைக் காப்பாயாக.

58. தாய ரெத்தனை தந்தைய ரெத்தனை
தாரங்கள் தமராஞேர்
சேய ரெத்தனை எத்தனை சென்மமென்
செனனத்தைத் தொகைகாணுத்

தீய னிப்பிறப் பினில்வந்து புல்லையைத்
தெரிசித்த நலத்தாலே
தூய னத்தனி மாலென்றன் பிறவியைத்
துடைத்தெனை ஆண்டானே.

(பொ-ரை) யான் அடுத்தடுத்து எடுத்த பிறவிகள் தோறும் தாயரும், தந்தையரும், மனைவியரும், உற்றாரும், பெற்ற மக்களும் எத்தனை எத்தனையோ பேராகப் பெற்றுள்ளேன். எடுத்த பிறவிகளும் கணக்கிலடங்கா. அத்தகைய தீயோனாகிய நான் இப்பிறவியில் வந்து திருப்புல்லாணியை வணங்கிய நன்மையால் அத்திருமால் என் பிறவி நீக்கி என்னை ஆட்கொண்டார்.

59. ஆண்ட (*பண்ட)பதார்த்தம் பெண்டிர் மக்கள்
அரும்பொருள் கிளைஞோர்கள்
பூண்ட பூணிவை தேகம்விட் டொழியுமப்
போதங்கு துணையாமோ
பாண்ட வர்க்கொரு தூதரைப் புல்லையம்
பதியரைக் கதியாக
மூண்ட ழைக்குமு னுபத்து வேளைக்கு
முன்னின்று காப்பாரே.

(பொ-ரை) நம் வாழ்க்கையில் அநுபவித்த பொருள்கள், மனைவி, மக்கள், அரும்பொருள், சுற்றத்தார், நாம் அணிந்த பொருள்கள் முதலியவை நம்மை விட்டு நீங்கும்போது நமக்குத் துணையாக இருப்பவர் பாண்டவர்க்குத் தூது சென்றவரும், புல்லைநகர்க்கரசருமாவார். அவரை விரைந்தழைக்குமுன் உடன் வந்து காப்பார். நம் ஆபத்தையும் களைவார்.

---

*பண்ட என்னும் சொல் சுவடியில் மிகையாய் உள்ளது.

60. பாரெ லாம்படைத் தாண்டழித் தொன்றுமிப்
படிக்குமுத் தொழிலாகுஞ்
சீரெ லாஞ்செப்பு மூவடி யாய்நின்ற
சின்மயப் பொருணீயே
வீர ராகவ ராகிமுன் னிலங்கையின்
வேந்தனைச் சினந்தோய்சொன்
னூர ணுவருள் வாய்புல்லை யாய்நம்பு
மடியவர்க் கெளியானே.

(பொ-ரை) இவ்வுலகை எல்லாம் படைத்தும், காத்தும், அழித்தும் முத்தொழில் நிகழ்த்தும் பெரியோனே! மூவடியால் உலகை அளந்த எம்மானே! வீரராகவனாய்த் தோன்றி இலங்கையில் வேந்தனாகிய இராவணனைச் சினந்த பெரியோனே! வேதப்பொருளாய் விளங்கும் நாரணா! நம்பினோர்க் கெளியோனே! என்னை அருள்வாயாக.

[வேறு]

61. அடியவர்க் கெளியார் புல்லை யம்பதி
குடிகொ ளுத்தம னூர்களி கூர்ந்திடும்
வடிவு பெற்றபற் பாதன வல்லியைப்
படியி னிற்படி யார்மரப் பாவையே.

(பொ-ரை) தன்னை வழிபடும் அடியார்க்கு எளியவனும், புல்லை நகரில் குடியுறையும் புகழுடையோனும் ஆகிய தெய்வச்சிலையான் மகிழ்வுகொள்ளும் எழில் வடிவார்ந்த பங்கயவல்லியாம் எங்கள் திருமகளை இவ்வுலகில் படிந்து வழிபடாதோர் மரப்பாவையே யாவர். மக்களாகவே கருதப்படமாட்டார்கள்.

62\. பாவை யர்க்கர சான பழம்பொருள்
தேவை யற்புத மாலைத் தினம்புணர்
பூவை யைத்திருப் புல்லையிற் பொன்னியைச்
சேவை பெற்றிடத் தீவினை யில்லையே

(பொ-ரை) பாவையர்கட்கு அரசாக விளங்குபவளும், எல்லாப் பொருள்களுக்கும் ஆதியாய் விளங்கும் அற்புதத் திருமாலினைப் புணர்பவளும், திருப்புல்லாணியில் எழுந்தருளியிருப்பவளும் ஆகிய திருமகளைச் சேவை செய்து வழிபட்டால் நம்மைத் தொடர்ந்து வரும் தீவினைகள் இல்லையாகும்.

63\. இல்லை இல்லை யெனும லிகபரத்
தொல்லை நீக்கித் துணைசெய் குவாடிருப்
புல்லை நாயகி பூவடி போற்றினல்
தொல்லை யானவுஞ் செய்வள் கதிக்கவே.

(பொ-ரை) இல்லை, இல்லையென்று கூறும் இழிவுள்ளவர்களது இகபரத் துன்பத்தையும் நீக்கித் துணை செய்குவாள். திருப்புல்லாணியில் கோயில் கொண்டருளும் திருமகளது தாமரை போன்ற திருவடியை வணங்கினல் தொல்லைகளையும், ஊறுபாடுகளையும் விரைந்து நீக்குவாள்.

64\. கதித்தன மேவு கடற்கரைப் புல்லையம்
பதித்த லம்புகல் பன்மணிக் கோயிலை
மதித்த லம்புயத் தானை வணங்குதல்
துதித்த லம்புவித் தூயவர் செய்கையே.

(பொ-ரை) விரைந்து செல்லும் அலைகளையுடைய கடற்கரையில் அமர்ந்துள்ள புல்லைத் தலத்தில் கோயில் கொண்டருளும் தாமரைமலரில் அமர்ந்துள்ள இலக்குமியை வணங்கித் துதித்தல் இவ்வுலகில் சிறந்த செயலாகும்.

65. செய்கை யாலுந் திறங்களி னாலின
வைகை பாயும் வளமுள சக்கரப்
பொய்கை சூழ்திருப் புல்லையி னாயகி
கைகை மேற்பலன் காட்டித் தருவளே.

(பொ-ரை) ஒழுக்கச் செயல்களாலும், ஒழுக்கமான நல்ல திறங்களாலும், வளமுள்ள நல்ல சக்கரத் தடாகம் சூழ்ந்த திருப்புல்லாணித் தலைவியை வழிபட்டோர்க்குக் கையிற் பலனைக் காட்டித் தருவாள்.

66. திருவ னந்தனை யாள்வர் கடண்மலர்
மருவ னந்தனை யூர்மன் னனுகிய
பருவ னந்தனைச் சேர்புல்லைப் பைங்கிளி
திருவ னந்தனைச் சேவித்த பேர்களே.

(பொ-ரை) தண்மையும், மணமும் நிறைந்த பிருந்தாவனத்துக்குத் தலைவனும், என்றும் மாறா இளமை பூண்டோனும் ஆகிய திருமாலை விழையும் புல்லைக் காட்டின் பைங்கிளியாகிய திருமகளை சேவித்த பேர்கள், கற்பகத் தருக்கள் நிறைந்த நந்தவனத்தை யாள்வர்.

67. பேரி லங்கும் பெரியவள் புல்லைமால்
பாரி யங்கம் பருமுலைச் சிற்றிடைத்
தூரி யங்கொண் டெழுதவொண் ணாத்துய்ய
நாரி யெங்கள் நயனத் திருப்பளே.

(பொ-ரை) சிறந்த புகழையும், பெருமையினையும், பருத்த மார்பினையும், சிறிய இடையினையும், எழுது கோலால் ஓவியன் எழுதவொண்ணா உருவத்தினையும் உடையவளாகிய எங்கள் திருமகள் என் கண்ணை விட்டகலாது இருப்பாள்.

68. திருப்புல் லாணித் திருமகள் சீரடி
விருப்பு ளோர்கள் வினைதவிர்ந் தேயென
நெருப்பு நீர்விண் ணின்மாரு தத்தால்வருங்
கருப்பு காமற் கதிகொடுத் தாள்வளே.

(பொ-ரை) திருப்புல்லாணியின் திருமகளாகிய இலக்குமிதேவி, தன் சீரிய அடியை விருப்பமுற்றோர்கள் வினையைத் தவிர்த்து விடுவாள். நெருப்பு, நீர், விண், காற்று, பூமி ஆகிய பஞ்சபூத இயக்கத்தால் கருவை யடைந்து பிறவாத கதியைக் கொடுப்பாள்.

69. ஆள வந்தவள் புல்லையி னாயகி
தாள லர்ந்த சரோருகந் தன்னிலெந்
நாள டங்கலும் நண்ணித் தொழாய்நெஞ்சே
கோள டங்கும்வெங் கூற்று மடங்குமே.

(பொ-ரை) என்னை ஆளவந்த புல்லை நகரத்தின் நாயகியாகிய திருமகளது திருவடிகளாகிய தாமரை

மலரை நாடோறும் விரும்பி வழிபட்டால் நமது * தீய கோள்கள் நீங்கும். கூற்றுவனும் அடங்கி நம்மீது வர அஞ்சுவான்.

70. அடங்க லாரை அடக்குமி ராகவன்
திடங்கொள் மார்புறை செவ்விதழ்த் தேன்மொழி
மடங்க லிலாத வல்லிநன் புல்லையின்
இடங்கொள் தேவியை நண்ணித் துதிசெய்வாம்.

(பொ-ரை) பகைவர்களை எல்லாம் எளிதில் அடக்கும் இராகவனது ஆற்றல் நிரம்பிய திருமார்பிலே உறையும் செவ்விதழும், தேன்மொழியும் உடைய மடங்காத கொடிபோன்ற திருப்புல்லாணியில் வீற்றிருக்கும் தேவியை வழிபட்டு வாழ்த்துவோமாக.

[வேறு]

71. துதிசெ யத்திரு மகிமை பெற்றிடு
துன்ப மாற்றிடு புல்லையி
னதிச யத்தினை யயனு ரைக்கவு
மரனு ரைக்கவும் வல்லரோ
கதிகொ டுத்துள மதிம யக்குறு
கசட றுத்திக முள்ளநாள்
நிதிகொ டுத்திடு முனைவ ளர்த்திடு
நிதநி னைத்திடு நெஞ்சமே.

* கோள்கள் — ஞாயிறு முதலாக சனியிறுதியாக உள்ள எட்டுக் கோள்கள்.

(பொ-ரை) பலரும் பாராட்டி வழிபடத்தக்க பீடும், பெட்பும் பெற்றுத் தன்னை அண்டினோர்க்குத் துன்பம் நீக்கும் திருப்புல்லாணியின் அதிசயத்தினைப் பிரமனும், சிவபெருமானும் உரைக்க ஆற்றல் உள்ளவர்களோ? இங்குள்ள நாட்களிலும் அறிவை மயக்கும் மாசைப் போக்குவதன்றி, சங்கநிதி, பதுமநிதி ஆகிய நிதிகளை அளித்து ஆட்கொள்ளும் முதற்பொருளாகிய இறைவனை, ஏ மனமே, நீ நினைந்து வழிபடுவாயாக.

72 நெஞ்சகத் தினிலே புலைத்தொழி
 னிதமு முற்ற கொடூரியாம்
வஞ்சகக் கொடியே னிடத்துளம்
 வைத்தெந் நாளருள்வாய் கொலோ
பஞ்சகத் தவியங் களைச்செய
 பராபரா வளர் புல்லைமேல்
விஞ்சகக் குருவே விணுடரை
 யுய்ய வைத்தரு ளையனே.

(பொ-ரை) உளத்திலே புலையும், கொலையுமே சிந்திக்கின்ற கொடூரத் தன்மையும், வஞ்சக நெஞ்சமும் கொண்ட கொடியவனாகிய என்னை அருள் நாட்டங் கொண்டு அருள் பாவிப்பாயாக. ஐந்தொழிலியற்றும் மேலான பரமா! திருப்புல்லாணியில் குடிகொண்டருளும் குருவே! தேவர்களை உய்யக்கொண்ட பெருமானே!

73 ஐயநின் னடியா ரடிப்பொடி
 யாகு மேழையன் மீதிலே

கையமர்த்தி யுன்னிரு விழிக்கடை
கனிகொள் மெய்க்கிருபை செய்குவாய்
வையமுற்று மளித் தழித்து
வளர்க்கு முத்தொழில் வல்லவா
செய்ய பற்பமின் மேவுமச்சுத
சீர்புல் லாணியின் மாயனே.

(பொ-ரை) பெரியோய்! நின் தொண்டர் அடித்தாசியாகும் ஏழையாகிய என்மீது கருணைமீக் கூர்ந்து கையை அருளுருவாய் அமர்த்திக்காட்டி உன் இரு விழியாம் கனிகொண்டு உண்மை அருளைப் பொழிவாயாக. நீயோ உலகைத் தோற்றிப் பின் காத்து இறுதியில் அழித்து வளர்க்கும் முத்தொழில் வல்லவன். மேலும் செந்தாமரை மலர்மீது அமர்ந்த மின்னலனைய திருமகள் உறையும் பெருமான் புல்லாணியின் மாயனுமாவாய்.

74. மாயனே திருமங்கை மேவு
மணாள னேயரு ளாளனே
தாயராகி யனந்த கோடி
சரா சரங்கள் புரந்தவா
நீயலா தெனையார் புரப்பவர்
நித்தனே அருள்வைத் திடாய்
ஆயனே யுனைநம்பி னேன்றென்
றிருப்புல் லாணி யனாதியே.

(பொ-ரை) மாயத்தன்மை பொருந்தியவனும், திருமங்கை உறையும் மணாளனும், அருள் செய்யவல்ல பெருமானும், இவ்வுலகில் உள்ள பலகோடி இயங்கியற் பொருள், நிலையியற் பொருள் ஆகிய அனைத்தையும்

தாய்போல் நின்று காத்தளிக்கும் கார்முகில் வண்ணா, நீ அல்லாது என்னைப்புரப்போர் யாருளர்? தென் திருப்புல்லாணியில் உறையும் ஆதியந்தமற்ற தூயனே, ஆயனாகிய உன்னை நம்பினேன் எனக்கு அருள் செய்வாயாக.

75. ஆதி யந்தமிலா தரும்பொரு
ளாகி யன்பருளந் தொறும்
சோதி யந்தரியா மியாய்வளர்
தூய்ய புல்லையி னையமுன்
காதி மைந்தர்பினே நடந்தொரு
கல்லை மெல்லியலாச் செய்தாட்
போதி லன்புளபேர் கள்விஞ்சுத
போதனம் பெறு போதரே.

(பொ-ரை) ஆதியும், அந்தமுமில்லா அரும் பொருளாகி, அடியார் உளக் கோயிற்கு ஏற்றும் ஒளிவிளக்காய் விளங்குவோனே! கோசிக மாமுனிவன் பின்னே சென்று, கல்லை அகலிகையாக்கிய நினது திருவடித் தாமரைகளின்மீது உள்ளன்பைச் செலுத்துவோர்கள் எல்லையற்ற தவமென்னும் தனத்தைப்பெற்ற ஞானிகளாவார்.

76. போத னண்டர்பிரான் வணங்கிய
புல்லை யம்பதி வல்லவன்
பாத நம்பெளியார் தமக்கொரு
பாவ மில்லை யதன்றியும்
மாதனம் பெறுவா ரிகத்தினின்
மண்ட லாதி பராகுவார்

காதனந்த வமரர் நாடிவர்
காணி யாக நிலைப்பரே.

(பொ - ரை) இந்திரனல் வணங்கப்பெற்றவனும், நிறைஞானம் கூடப்பெற்றவனும் புல்லையம்பதியில் கோயில் கொண்டு அருளுபவனுமாகிய தெய்வச்சிலையானின் திருவடியைப் பற்றியோர் எத்தகைய பாவத்தையும் பெற மாட்டார்கள். மேலும் பெருஞ்செல்வம் பெறுவர். இம்மையில் மண்ணுளும் வேந்தராம் சிறப்பையும் எய்துவர். நித்யஸூரிகள் வாழும் பரமபத நாட்டைத் தம் இருப்பிடமாகப் பெற்று நிலைத்து வாழ்வர்.

77. **நிலைப்பிலாத பவத்தை விட்டு**
நிவர்த்தி செய்யு மிகத்திலே
மலைப்பிலா மனமக்கு நாலிரு
மைந்தர் தந்திடு நெஞ்சமே
அலைக்கடற் கரைமேவு புல்லையி
லரசுநீழ லமர்ந்து வாழ்
சிலைக்கை மாலுரமேவு மாமகள்
சீரடித் துணை யானதே.

(பொ-ரை) அலைகளையுடைய கடற்கரையில் அமைந்துள்ள திருப்புல்லாணியில் அரசமரத்தின் நீழலில் அமர்ந்து வாழும் தெய்வச் சிலையானின் மார்பில் உறையும் திருமகளின் திருவடியைத் துணையாகப் பற்றினல் நிலையற்ற பிறவி நம்மைவிட்டு நீங்கும். இம்மையிலே இடுக்கண் களைந்து சிறந்த மக்கட்பேற்றை எய்தலாம்.

78. ஆனனங் குளிர்பூர்ண சந்திர
னனை மத்தக மாமுலை
தேனமர்ந்த சொன் னூலிடைக்கொடி
செவ்விதழ்த் திருமா தினைத்
தானினைந்து புல்லாணி யூடு
தனித்திருப் பவர் போலவே
மோன மந்திர ஞானரிப்படி
முற்றிலுங் கிடை யாததே.

(பொ-ரை) முழுமதி போன்ற குளிர்ந்த முகத்தினையும், பெரிய தனங்களையும், தேனூறும் சொல்லினையும் நூல் போன்ற இடையினையும், செவ்வாயினையும் உடைய திருமகளை நினைந்து திருப்புல்லாணியில் தனித்திருப்போர் போல மௌனியாயும், ஞானியாயும் விளங்குபவர் இவ்வுலகில் யாரும் இல்லை.

79. யாதனைப் படவே யெதிர்த்திடு
யானை மத்தக மாகிய
மாதர் குத்துமுலைக் குளேஅவர்
மைக்கண் வீசு வலைக்குளே
தோதகத்தியர் லீலை யானதி
லேசுழன்று விடா தெனை
யாதரித் திடுவாய் புலாணி
யமர்ந்த சக்கர பாணியே.

(பொ-ரை) உள்ளத்தை வேதனைப்படுத்துவதும் எதிர்ப்படும் யானையின் பிடர் போன்று பரந்துபட்டது

மான மாதரின் மூலையிலும், அவர்கள் வீசும் கடைக் கண் வலைக்குளும், அவர்களது சிற்றின்ப லீலைகளுக் குள்ளும் சிக்கிச் சுழலாது என்னை ஆதரித்துக் கரை ஏற்றுவாய்.

80. பாணியுற் றிடுபொய்கை யூடு
படிந்து கற்படி ஏறுவோர்
ஏணிவைத்து வைகுந்த லோக
மிகத்தி லேறவும் வல்லரே
நீணிலத்தது சக்கரத் தட
மென்று நெஞ்சு ணினைந்துபுல்
லாணியைத் துதிசெய்த பேர்திரு
வண்ணல் வண்ணமு மாவரே.

(பொ-ரை) நீர் நிறைந்த பொய்கையில் நீராடி அப் படியில் ஏறுவோர் வைகுந்தப் பதவியை எளிதில் ஏணி வைத்து இம்மையில் பெறுவர். இவ்வுலகில் இதனைச் 'சக்கரதீர்த்தம்' என உள்ளத்தே நினைந்து திருப்புல் லாணியை வழிபடுவோர்கள் திருமாலின் திருவண் ணத்தை எய்துவர்.

81. மாவனஞ் செறி புல்லையின்
மருவு மானந்த
கோவ னந்தனன் கோவியர்
கலைகவர்ந் தொளிக்குந்
தேவ னந்தனைத் தொழுமடி
செய்சிந்தையே நமக்குப்
பாவ னந்து நாநினைத்ததும்
பலிக்குமிப் படிக்கே

(பொ-ரை) மிருகங்கள் உறையும் வனஞ்செறிந்த திருப்புல்லாணியில் மருவும் ஆனந்தத்தையுடைய ஆய்ப்பாடிச் சிறுவனும், கோபியர் மடந்தையின் ஆடைகளைக் கவர்ந்தொளித்த அமரர் தலைவனும் ஆகிய இறைவனைத் தொழும் சிந்தையே நமக்கு பாவம் நீக்கி உளம் நினைத்ததை உள்ளவாறு பலிக்கச் செய்யும்.

82. படிக்கலாந் திருப்புல்லையிற் பரனிசை படித்தே
நடிக்கலாந் திருநாம மாமதத்தை நாவாற்
குடிக்கலா நமன் கொட்டத்தை யடக்கியே [வெருட்டி
யடிக்கலா மயராது துதித்திடா யகமே.

(பொ-ரை) திருப்புல்லாணியில் கோயில் கொண்டருளும் திருமாலைப் பற்றிப் பலப்பல இசைகளைப் பாடலாம். அப்பெருமானின் புகழைப் பாடி நடிக்கவும் செய்யலாம் அவன் திருநாமமென்னும் மதுவை இடையறாது நாவாற் பருகலாம். இயமனின் செருக்கையும், திமிரையும் அடக்கி வெருட்டி ஓட்டலாம். ஆகையால் ஏ மனமே! அவனை என்றும் உளத்தே போற்றிப் புகழ்வாயாக.

83. அகத்தினுல் வருமாசையை யகலவே துரத்திச்
சகத்தில் வஞ்சக மாயையைத் தன்னுளே யடக்கி
மகத்துவம் பெறுபுல்லை மாறிருவடி வணங்கிச்
சுகித்த பேர்க்கலாற் றெரியுமோ சொருப நிச்சயமே.

(பொ-ரை) உளத்தே தோன்றும் ஆசையை ஒழியுமாறு துரத்தி, இவ்வுலகில் உள்ள வஞ்சகத் தன்மை

யையும், மாயையினையும் தன்னுளேயடக்கிச் சீர்பெறும் திருப்புல்லாணியின் திருமாலின் திருவடிகளை வணங்கி மகிழ்ந்தோர்க்கன்றி மற்றையோர்க்கு அவன் உண்மை உரு எளிதில் வெளிப்படுமோ? படாது.

84. நிச்சயங் களில்லாத பொல்லா வஞ்சநினைவுந்
துச்சமாகிய புன்மையே பொருந்து புன்றொழிலு
மச்சமானதும் பெறுங் கொடியேனை என்றுள்வாய்
நச்சராவினில் விழிதுயில் புல்லை நாயகனே.

(பொ-ரை) நச்சரவில் அறிதுயில் அமர்ந்த திருப்புல்லாணியின் நாயகனே, நிலையற்ற பொல்லா வஞ்சகச் சூழ்ச்சியினையும், புன்மை செறிந்த புன்தொழிலையும் உடைய, மாசினையுடைய கொடியேனாகிய என்னை என்று வந்து ஆட்கொள்வாய்?

85. நாயகா செகநாத சற்குரு வென்று நாவா
லீயலா தேதென்றுணை யென்றும் எதுகுல
[னென்றும்
தூய நான்மறைப் பொருளென்று முனைத்
[துதித்தறியேன்
மாயை தீர்த்தருள்வாய் திருப்புல்லையின் மாலே.

(பொ-ரை) திருப்புல்லாணியில் உறையும் திருமாலே! உன்னை நாயகன் என்றும், உலகநாதன் என்றும், ஞானாசிரியனே என்றும் நாவால் துதிக்கவுமில்லை. மேலும் நீயல்லாது எனக்கு வேறு துணையில்லை என்றும், எதுகுலத் தோன்றல் எனவும், நான்மறையின் தனிப்பொருளே என்றும் உன்னைப் பாராட்டி அறியேன். எனது அஞ்ஞானத்தை நீக்கி என்னை விரைந்து வந்து அருள்வாயாக.

86. மாலையைப் பெருமதி யத்திலே வரவழைக்கத்
தாலசக்கரம் விணில்விடு சுந்தரத் தோளா
சாலநற்புவி புரந்தருள் புல்லை மாதவனே
நீலமைப் புயலே யெனைநித மகிழ்ந்தருளே.

(பொ-ரை) நிலவொளிரும் இராக்காலத்தில் மாலைப் பொழுதினை வரவழைக்க எண்ணிச் சக்கராயுதத்தை விண்ணிலேவிட்ட அழகிய தோளனே! உலகினைச் சிறப்பாகப்புரந்தருளும் புல்லை மாதவனே! நீலவண்ணப் புயலாயுள்ள நெடுமாலே! என்னை நாடோறும் நீ மகிழ்ந்து அருள்வாயாக.

87. அருளிலா மையும் வஞ்சகத் தொழிலு மவ்வவர்கள்
பொருளெலா மபகரித்திடும் புந்தியும் பொருந்து
மருளைநீக்கி யட்டாக்கர வடிவமே புல்லைத்
திருமணாள வென்றீவினை தீர்த்தரு டேவே.

(பொ-ரை) அருளிலா வெறுங்கிலேயினையும், வஞ்சகத் தொழிலையும், மற்றோர் பொருளை எல்லாம் அபகரிக்க நினைக்கும் மாசுற்ற உள்ளத்தையும், மயக்க உணர் வினையும் நீக்கி திருவெட்டெழுத்தின் வடிவமாய்த் திகழும் புல்லைநகர்த் திருமணாளா! என் தீவினையைத் தீர்த்தருள்வாயாக.

88. தீர்த்தமாவது சக்கரத் தீர்த்தமே தீர்த்தங்
கீர்த்தனத் திலுன் றுயிரநாம கீர்த்தனமே
மூர்த்தியாவது புல்லையின் மூர்த்தி நீயலது
வார்த்தை வேறுளதோ மல்லைமருவு தற்பரனே.

(பொ-ரை) உலகில் நீராடும் புனிததீர்த்தம் என்று கூறினால் சக்கரதீர்த்தம் ஒன்றே உயர்ந்ததாகக் கருதப் படும். உன் ஆயிரம் திருப்பெயர்களையும் பாடிப் புகழும் புகழே சிறந்த புகழுரையாகும். திருப்புல்லாணியில் உறையும் இறைவன் திருவுருவமே உருவமென எண்ணப்படும். புல்லாணியில் உறையும் பெருமானே! உன்னைப் பேசும் பேச்சன்றி வேறு பேச்சு உளதோ.

89. பரமனே சரணம்புயந் தன்னையே பணிந்தேன்
வருமெனக் கொரு பொருளுதவவ் வரமெதெனில்
இரவெனப் பகலென வருமிரண்டிலா விடத்திற்
றிரமெனப் பதிபுல்லையிற் றெய்வ நாயகனே.

(பொ-ரை) உலகின் தனிமுதலே! உன் பாத கமலங்களைப் பணிந்தேன். உன்னை இடையறாது வழி படும் எனக்கு ஒரு பொருளை உதவுக. யான் நின்னை வேண்டும் வரம் யாது என்றால் இரவெனவும் பகலென வும் இவ்விரண்டுமில்லாத பரமபதத்தில் என்னை நிலை யாய் வைத்திடுவாயாக. புல்லை நகரிற் கோயில் கொண் டருளும் தெய்வநாயகனே!

90. அகந்தை யாகுமஞ் ஞானத்திலு
ழன்றுழன் றலைந்து
சுகந்த மாமுலை மாதர்கண்
வலையினிற் சுழன்று
மிகம் பெறேன் பரமும்
பெறேனென் செய்வேனுள்வாய்
முகுந்த மாதவ புல்லையி
னெந்தனி முதலே.

(பொ-ரை) யான், எனது எனும் அஞ்ஞான இருளில் வருந்தி வருந்தி ஆழ்ந்து, இன்பந்தரும் மடவாரின் தனத்திலும், கண் வலையிலும் சுழன்று இம்மையும், மறுமையும் ஆகிய இருபேற்றினையும் பெருது உள்ள என்னை, முகுந்த மாதவனே, புல்லையின் தனிநாயகனே, விரைந்து ஆட்கொள்வாயாக.

[வேறு]

01. தனிமுத றிருப்புல்லாணி யரசுநிழலச் சுதாவு
......................னுடன்மீதே
கனி..........டுத்த தூயவுனை நினைவில் வைத்திடாத
கசடர்மதியிற் புகாத திருமாலே
நனிமலர் முடித்தகோதை யமுதுட னுதித்தபேதை
நளினமலரிற் பொன்மாதை யணிமார்வா
இனியுனை மறப்பிலாமை நினைவினி லிருத்திநாளு
மெளியன் மனதிற்குலாவி மருவாயே.

(பொ-ரை) ஒப்பற்ற முதற்பொருள் குடிகொள்ளும் திருப்புல்லாணியில் அரசமர நீழலில் திருமகளுடன் அமர்ந்து அருள்பாலிக்கும் அமரர் தலைவனுகிய திருமால் தீயோர் அறிவில் புகமாட்டார். மலர் முடித்த குழலினையும், அமுதுடன் தோன்றிய சிறப்பும் எய்திய அலைமகளாம் இலக்குமியை மார்பில் பெற்றேனே! யான் உன்னை இனி மறவாது நினைவிலிருத்தி வழிபட என் மனதில் குடிகொண்டு மருவுவாயாக.

92. மருமலர் முடித்துமார்வி னிருமுலை குலுக்குமேனி
வதனமு மினுக்கியேகண் வலைவீசி

யுருகவு மயக்கியாசை பெருகவு நெனிக்குமாத
ருறவின் மனம்வைத் தெந்நாளு முழல்வேனே

கருமுகி னிகர்த்த மேனியழகுள சமர்த்தநீடு
கருணையது வைத்தென் மிதிலநன் வாயே

அருமறையினுச்சி தேடு திருவளர் திருப்புல்லாணி
யரசுநிழலிற் குலாவு பெருமானே.

(பொ-ரை) மண மலர்களைச்சூடி, இரு நகில்களை யும் குலுக்கி உடலையும், முகத்தையும் ஒப்பனையால் ஒளிரச்செய்து கண்ணாகிய வலையைவீசி இளைஞர்களின் கருத்தைக் கவரும் ஆசையூட்டும் மாசுடைய மாதர் உறவில் நாட்டங்கொண்டு உழலாது, புயல் வண்ணனை யுள்ள எழில் முகுந்தா! நீண்ட அருளை அடியேன்மீது வைத்து அருளுக. அரிய மறைகள் காணாது ஆய்ந்து கொண்டிருக்கும், திருமகள் உறையும் திருப்புல்லாணி யில் அரசமர நிழலில் உறையும் பெருமானே! என்னை அருள்செய்து அருளுக.

93\. பெருவயிறு கண்டமாலை யுதரவலி அண்டவாயு
பிரமிய கிரந்திசூலை தலைநோவும்

இருமலொடு தந்தவாயு குருடுசெவிடுஞ் சொலூமை
யிவைகண்முத ரெந்தரோக வினையாவும்

ஒருநொடியி லஞ்சியோடும் வறுமையொடு
[செஞ்சிதாதி

யுபரியினடந்த பாவமது தானும்

மருமலர் பிறந்தகோதை மருவ்வளரும் புல்லாணி
வளரரசு கண்டபேரை யணுகாதே.

(பொ-ரை) "பைங்கமலத்தண் தெரியல்" திருமகள் பாங்குடன் உறையும் திருப்புல்லாணியில் வளரும் தலவிருட்சமாகிய அரசினைக் கண்டோர்க்குப் பெருவயிறும், கழுத்தைச் சுற்றி இடையறாது வரும் கண்டமாலையும், வயிற்றுவலியும், அண்ட வாயுவும் கிரந்தியும், குன்மமும், தலைநோவும், இருமலும், பல்வலியும், குருட்டுத் தன்மையும், செவிட்டுத் தன்மையும், ஊமைநிலையும் பிற தொத்து நோய்களும் ஒரு நொடிப் பொழுதில் அஞ்சியோடும். வறுமையும், பழவினையால் எய்திய சஞ்சிதகருமம் என்னும் பாவமும் அவர்களை அணுகா.

94. காதல்பெருகுஞ் சையோக மாதரிரு கொங்கைமீது
காமவெறி கொண்டுலாவு சிந்தையாகிப்

பாதகமும் வஞ்சமான சூதுகளவுஞ் செய்பாவி
பான்மனதிரங்கி யாள்வ தென்னுளோ

மாதவ முகுந்த கேசவாசெக மளந்தபாத
மாமலர் மடந்தைமேவு செம்பொன்மார்வா

சீதமதி வந்துலாவு சோலைசெறியும் புல்லாணி
சேரரசு வந்துவாழ் சுகந்தமாலே.

(பொ-ரை) காதலைப் பெருக்கும் களிப்புடை மாதரது கொங்கைமீது காமவெறிகொண்டு அலையும் உள்ளத்தையும், பழிச்செயலையும் வஞ்சகமான சூதினையும், களவினையும் செய்யும் பாவியாகிய என்மீது மனது இரங்கி ஆள்வது எந்நாளோ? மாதவா, முகுந்தா, கேசவா, உலகளந்த உத்தமனே, திருவமர் மார்பா, தண்மதி ஒளிர்ந்து உலாவும் பொழில்சூழ்ந்த புல்லாணியில் உள்ள தலமரமாகிய அரசின் நீழலில் அமர்ந்துறையும் அமரா, என்னை ஆள்வாயாக.

95. கந்தமு மிகுந்துவீசு கொங்கைகள் குலுங்கநீடு
கண்கள்சுழல் வஞ்சமாய வஞ்சிமார்கள்
தொந்தமிடவுஞ் சையோக விஞ்சையி லுழன்று [மாதர்
தொண்டனென நின்றெனுவி மங்குவேனோ
பைந்துளவ நந்தகோப னந்தன முகுந்தபாத
பங்கய மகிழ்ந்துநீ வழங்குவாயே
யைந்தவி வளர்த்தவேதன் வந்துபரவும் புல்லாணி
யம்பதி வளர்ந்ததேவர் தம்பிரானே.

(பொ-ரை) பசுந்திருத்துழாய் மாலையை அணிந்தோனே, நந்தகோபன் செல்வத்திருமகனே, முகுந்தா, ஐந்து வேள்விகளை நிகழ்த்திய பிரமன் வழிபட்ட திருப்புல்லாணியில் வளரும் தேவதேவா, மணம்பூசி, மார்பகம் விம்மிக் குலுங்க, நீண்ட கண்களைச் சுழற்றி வலையை வீசும் வஞ்சிக்கொடிபோன்ற மடவார் ஆசைகாட்ட அச் சிற்றின்பச் சேற்றில் ஆழ்ந்து பெண்டிர் தொண்டனாய் உயிர் வருந்தாது, நின் திருவடித் தாமரை காட்டி என்னை உய்யக் கொள்வாயாக.

96. தம்பமென வுன்றனும மந்திரம தொன்றுபாடு
தண்டமிழின் விண்டிடாத புலிப்பேயன்
செம்பவள மென்ற மடந்தையர் புணர்ந்தலீலை
சிந்தையி னினைந்துமேனி தவிப்பேனோ
நம்படிய னென்றன் மீதிரங்கி யருளுங்கிருபாள
நந்தனி முகுந்தபானு குலத்தோனே
யம்பனி தடங்கள் வளம்பெருகு பூம்புல்லாணி
யம்பதியி லெந்தநாளு மிருப்போனே.

(பொ-ரை) தண்மையான தடாகங்கள் நிறைந்த புல்லாணிப் பதியில் எந்நாளும் குடியிருக்கும் ஏந்தலே! ஒப்பற்ற சூரிய குலத்துதித்த தூயோனே! உன்றன் திருப்பெயரினை உறுதியான பக்தியோடு சொற்றமிழால் பாடாத சிறியேன் பவள இதழையுடைய மடவார் புணர்ச்சியிலீடுபட்டு அல்லீலைகளில் என்னை மறந்து உழல்வேனோ? அடியனாகிய என்மீது மனமிரங்கி அருளுவாயாக.

97. இருப்பிலே தனியிருந்து நெருப்பிலாகுதி சொரிந்து
மிருட்டுநேர் குகைபுகுந்து நெடுநாளும்
பொருப்பிலேறியு மலைந்து பொரசிப்புமாறியு மடர்ந்த
புனத்திலே வெயிலும் வந்து ....உழலாமல்
விருப்புமா யசனமுண்டு சுகிக்கலா மிகபரங்கள்
விளக்க மாயடைவதென்று மெளிதாகத்
திருப்புல்லாணியின் முகுந்தர் தருப்பை
[மீதினிலுவந்து
திருக்கண்மேவிய தேவை நினைவீரே.

(பொ-ரை) தனியேயிருந்து வேள்விசெய்து நெருப்பில் அவிசைச் சொரிந்து இருட்டு நிறைந்த குகையில் புகுந்து நீண்டநாட்கள் மலையேறியும் உண்ணா நோன்பு மேற்கொண்டும் அலைந்து திரியாமல் இம்மை, மறுமை இன்பங்களை எளிதில் பெறும் வாய்ப்பை நீங்கள் அடையவேண்டுமாயின் தர்ப்பையில் சயனித்துள்ள தாமோதரனை இடையறாது நினையுங்கள்.

98. நினைவுகள் மறந்துவாயு முளறவு மலஞ்சலாதி
நெகிழவு மிருண்டகாலன் வருநாளின்

மனைவியரு மைந்தரான வருமுடனிருந் தழாமுன்
வசையொடு பிணம்பொலா தையெனுமுன்

தினகர குலங்கள் வாழமருவு ரகுலிங்கதீப
திலக சனகன்குமாரி மணவாளா

வெனவுரை செய்தும்புல் லாணியரசினை
[வணங்கநாளு

மிகபர வைகுந்தநாடு மடைவீரே.

(பொ-ரை) நினைவு நம்மை விட்டு நீங்கவும், வாய் உரையை இழக்கவும், மலமும், சலமும் நம்மையறியாது கழியவும், இருண்ட கரிய நிறத்தையுடைய காலன் வரும் நாளில், உற்ற மனைவியும், பெற்ற மக்களும் உடனிருந்து அழுது அரற்றுவதற்கு முன் வசைசுமந்த பிணமாகு முன், ஐயனே சூரிய குலத்திலே தோன்றிய சோதியே, சனக மன்னனின் மகளாம் சானகியின் மணவாளா, என்று உரைத்தும், திருப்புல்லாணியில் அனைத்துல குக்கும் அரசனாய் வீற்றிருக்கும் தேவர்கோனை தினமும் வணங்கியும் இம்மையின் பமும், மறுமையின்பமும் வைகுந்தமும் எளிதில் அடைவீராக.

99. அடையவ னிலங்கையூரி லரசுசெய் வந்தராவ
ணனையடர வென்றுவாகை புனைதோளா

யிடரது புரிந்தென்மீதி லெதிரியென வந்தபேரை
யிடறியுன தன்பன்மீதி லருள்வாயே

* ....
....

கடகரி பயந்துமூல மெனவுரை செயன்பநீடு
கமலைமருவும் புலாணி யுறைவோனே.

---

* இச் செய்யுளில் இடையில் இரு அடிகள் ஏடுகளில் ஒன்றிலும் காணப்பெறவில்லை.

(பொ-ரை) இலங்கையென்னும் ஊரில் யாவரையும் அடிமைகொண்டு அரசு செய்துவந்த இராவணனை நெருங்கி அடர்த்து வெற்றி பூண்ட வீரத் தோளனே, எனக்கு இடர்செய்து எதிரியாய் வருபவர்களை அழித்து உனது அன்பனாகிய அடியேனை அருள்வாயாக. மத நீர்ப் பெருக்கினையுடைய யானை அஞ்சி ஆதிமூலமே என்று அபயக்குரல் எழுப்பியபோது அஞ்சேல் என அருள் செய்தவனே, திருமகள் மருவிவாழ், திருப் புல்லாணி இறைவனே, அருளுக.

100. **ஓநமோ நமவாதியான வாசகமும் வேதன்**
ஓதுநான் மறைகடேடு பெருமானே
மோந மாதவர்கணாடு சோதியே சரணமாதி
மூலமே கிருபையே செய்யென்மீதே
சாநகீ ரமண ராமராகவா வகலிமாது
சாபமோசன வெனா மென்மேலும்
வானரர் தேடியபுல்லாணி வாழ்கமாநில [முழுதும்
வாழ்கவே யருள்குலாவும் பொன்மாலே.

(பொ-ரை) ஓநமோ நம முதலாகிய வாசகங்களும் பிரமனால் ஓதப்படுகின்ற நான் மறைகளும் இடையறாது ஆராய்ந்து தேடும் பெரியோனே, மௌனிகளான பெரிய முனிவர்கள் நாடிக்காணும் ஒளிப்பிழம்பே, உலகிற்கு ஒரு தனிமூலமே, என்மீது அருள் கூர்ந்து நின் கருணையைப் பொழிக சாநகி மணமகிழும் இராக வனே, அகலிகை என்ற பெண்ணிற்கு சாப நீக்கம்

அளித்த பெரியோனே! வானரவீரர் தேடிக்கண்ட திருப்புல்லாணி வாழ்க, உலகமுழுதும் ஓங்குக! அருள் நிறைந்த பெருமாளே, உன் அருளைப் பொழிக!

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

சீயர் திருவடிகளே சரணம்.

[புல்லையந்தாதி முற்றும்.]

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

பிழை திருத்தம்

பக்கம்	பாடல்	அடி/வரி	பிழை	திருத்தம்
9	12	2ம் அடி	கண்ட	கடைத்
12	17	21ம் வரி	உயிரை	பூமியை
15	22	முதல் அடி	முழுதுமாய்ப்	முழுதுமாயப்
16	24	2ம் அடி	மனைதோறும் பொய்	மனைதோறும் போய்